REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN 92

2024 ஓகஸ்ட் 7 புதன்கிழமை

வரு. 92 இல. 187 | Wednesday 07, August, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## யாழ். நல்லூர் கந்தன் ஆலய கொடியேற்றம்

### செப். 01 ஆம் திகதி தேர்த்திருவிழா

யாழ். விசேட நிருபர்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் (09) வெள்ளிக்கிழமை காலை

06

## சூடு பிடிக்கும் ஜனாதிபதி தேர்தல் களம்

# தம்மிக்க போட்டியிலிருந்து விலகல்



### அந்த இடத்துக்கு நாமல் ராஜபக்ஷ போட்டியிட வாய்ப்பு ?



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி அபேட்சகர் போட்டியிலிருந்து தாம் விலகுவதாக வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் ஜனாதிபதி அபேட்சகர் போட்டியிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் விலகுவதற்கான முடிவை எடுத்ததாக தம்மிக்க பெரேரா அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தாம் போட்டியிட தயாராக இருப்பதாக தம்மிக்க பெரேரா முன்னர் தெரிவித்திருந்தார். இன்று காலை பத்தரமுல்ல நெலும் மாவத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் கட்சியின் வேட்பாளர் நியமனத்துக்கான பெயர் குறிப்பிடும் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவை தமது கட்சியின் வேட்பாளராக நியமிக்கவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து ராஜபக்ஷக்களின் ஆசியுடன் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இக்கட்டான நிலையில் எமக்கு உதவிய நாடு; பங்களாதேஷ் விரைவில் வழமைக்கு திரும்பும்

### நம்பிக்கையுடன் கூறுகிறார் ஜனாதிபதி




பங்களாதேஷ் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பும் என்பதில் சந்தேகமில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுதெரிவித்துள்ளார். நம் நாடு, இக்கட்டான சூழ்நிலையிலிருந்தபோது, ஷேக் ஹசீனாவின் தலைமையில் 200 மில்லியன் டொலர்களை பங்களாதேஷ் வழங்கியதை மறக்க முடியாதென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறையிலிருந்து முன்னாள் பிரதமர் காலிதா ஷியா விடுதலை செய்யப்பட்டதில் மகிழ்ச்சியடைகிறேன். ஷேக் ஹசீனா நீண்ட காலத்துக்கு முன்பே இதைச் செய்திருந்தால், அவர் இன்னும் பங்களாதேஷின் பிரதமராக இருந்திருக்க முடியும்.

பங்களாதேஷில் நிலைமை விரைவில் சீரடையுமென நம்புகிறோம். குறுகிய காலத்தில் பங்களாதேஷ் மீண்டு வரும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இலங்கையில் எங்களுக்கு நடந்ததை நினைவில் கொள்ள வேண்டும். பங்களாதேஷின் மிகப்பெரிய

06

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின்

## நிரந்தர வைப்புத் தொகைக்கு பத்து வீதமாக வட்டி அதிகரிப்பு

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்



அறுபது வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத்தொகைக்கான வட்டி வீதத்தை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதன் அடிப்படையில், இரண்டு வருட காலங்களுக்கு பத்து வீத வருடாந்த வட்டி வீதத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (06) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். வட்டி வீதத்தை 10 சதவீதமாக உயர்த்தவும், சந்தை வீதத்திற்கும் மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் வட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை 10 சதவீதம் வரை, அரச வங்கிகளுக்கு மானியமாக வழங்கவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தற்போது நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி விகிதம்

06

03 83,000 அரச சேவை ஓய்வூதியம் பெறுவோர் முரண்பாடுகள் நீக்கம்

## ஷேக் ஹசீனாவுக்கு உதவி புரிவதில் இந்தியா உறுதி

### பங்களாதேஷ் பாராளுமன்றம் கலைப்பு; நாட்டை நிர்வகிக்க இடைக்கால அரசு



பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு உதவுவதாக இந்தியா உறுதியளித்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். அதேநேரம் பங்களாதேஷ் இராணுவத்துடன் இந்தியா தொடர்பில் உள்ளதாகவும், அங்குள்ள நிலவரங்களை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும்

06

## சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவே ஜனாதிபதி போட்டி

### தேசத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளை முன்னெடுக்க ஜனாதிபதியை ஆதரியுங்கள்



ஜனாதிபதி எந்த கட்சியையும் பிளவுபடுத்தவில்லை. கட்சிகள் பிளவுபட்டிருந்த காலகட்டத்திலேயே ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றிருந்தார். தற்போதும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் சுயாதீன

06

### தோட்டத்தொழிலாளர்களின் இடைக்கால நிவாரணம்

## திறைசேரி செயலாளருடன் கிழக்கு ஆளுநர் செந்தில் பேச்சு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான இடைக்கால நிவாரணம் தொடர்பாக திறைசேரி செயலாளர் கே.எம். மகிந்த சிறிவர்த்தனவுடன், பேச்சு நடத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமான் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

06



03 சர்வதேச உறவுகளுக்கான மேற்பார்வைக் குழு
நாமல் ராஜபக்ஷ எம்.பி விலகியதால் பிரேம்நாத் சி தொலவத்த எம்.பி நியமனம்

## இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு இருதரப்பு ஆய்வுக்குழுவின் ஊடாக தீர்வு

### தமிழக மீனவரிடம் அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது



இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இக்குழுவில் இந்தியா சார்பில் நால்வரும், இலங்கையின் சார்பில்

06

## உணர்வுகளுக்கு அடிபணியாது சிந்தித்து செயற்பட வேண்டும்

### ஜனாதிபதி ரணில் அதனையே செய்துள்ளார்

லோரன்ஸ் செல்வநாயகம்



தவறான தீர்மானங்கள் மூலம் மீண்டும் நெருக்கடிகளே ஏற்படும் என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டுமென அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னைய நிலைமையை பார்க்கும்போது, அதிலிருந்து மீள முடியுமென எவரும் நம்பவில்லை. எனினும் ஜனாதிபதி

06

## SLPPயை உடைக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படவில்லை

### மக்களின் கருத்துக்கமையவே ஜனாதிபதியுடன் இணைந்தோம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை இரண்டாக பிளவுபடுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் முயற்சிக்கவில்லையென, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்சியாக இணைந்து செயற்பட வேண்டுமென

06

## இஸ்ரேலில் பணியாற்றுவோருக்கு அவசர தொலைபேசி இலக்கங்கள்

### இஸ்ரேல் அதிகாரிகள் நடவடிக்கை

**மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்து வரும் மோதல் நிலைமையைக் கருத்திற் கொண்டு, இலங்கையர் உட்பட இஸ்ரேலில் தொழில்புரியும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவசர தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்த இஸ்ரேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

**தற்போதைய சூழ்நிலையில் ஏதேனும் தாக்குதல்களால் ஏற்படக்கூடிய அவசரநிலை தொடர்பில்,**

06

## கடற்பரப்புக்குள் அத்துமீறிய தமிழக மீனவர்கள் 22 பேர் கைது



நாட்டின் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 22 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மன்னார், குதிரைமலை முனை கடற்பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை (05) இரவு இவர்கள் கைதாகினர்.

கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு திணைக்களம் இணைந்து (05) மன்னார்

06

### கேரளாவில் அமீபா தொற்று தீவிரம்

## மனிதனின் மூக்கினூடாக சென்று மூளையை உண்ணும் பக்டீரியா

**நீர் தேங்கும் குளம், குட்டைகளில் நீராடவேண்டாம்**

**மூளையை உண்ணும் பக்டீரியாவான அமீபா காய்ச்சல் இந்தியாவின் கேரள மாநிலத்தில், மிக வேகமாக பரவி வருகிறது.**

**இதனை amoebic meningoencephalitis அல்லது braineating amoeba infection அதாவது மூளையை உண்ணும் பக்டீரியா எனவும் அழைக்கின்றனர். திருவனந்தபுரத்தில் மேலும் 04 பேருக்கு அமீபா மூளைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக, கேரளா அரசு தெரிவித்துள்ளது.**

06

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அநுரகுமார திஸாநாயக்க கட்டுப்பணம்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அநுரகுமார திஸாநாயக்க சார்பில் நேற்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. தேசிய மக்கள் கட்சியின் சார்பில், இவர் போட்டியிடவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கட்சியின் சட்டத்தரணிகளுடன் சென்று நேற்றுக் காலை கட்டுப்பணத்தை இராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் செலுத்தினார். இதையடுத்து, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது.

## தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித்துக்கே ஆதரவளிக்கிறது

### மனோ கணேசன் MP தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிக்கவுள்ளதாக, தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

06

## தமிழ் பொது வேட்பாளர்: ரெலோ ஆதரித்தாலும் நான் எதிர்ப்பேன்



தமிழ் பொதுவேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் தாம், ஆதரவு வழங்கப்போவதில்லை என்றும் வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுபற்றித் தொடர்ந்தும் தெரிவித்த அவர்:

06

# முஸ்லிம் சமய திணைக்கள பணிப்பாளராக நவாஸ் பதவியேற்பு

**கொழும்பு தினகரன் நிருபர்**



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக எம்.எஸ்.எம். நவாஸ் நேற்று செவ்வாய்க்கிழமை (06) தனது கடமையை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார். இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த இவரை அமைச்சு புதிய பணிப்பாளராக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் இவர், இறைவரித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் அதன் பின்னர் கைத்தொழில் அமைச்சின் மேலதிக உதவிச் செயலாளராகவும் கடமையாற்றி தற்போது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் பீ.எம். முக்தாரின் தாய் மாமா காலமானார்



பேருவளை சீனன் கோட்டை வடுகொடை சேக் இப்ராஹிம் மாவத்தையைச் சேர்ந்த எம்.எஸ்.எம். இஸ்பார் ஹாஜியார் நேற்று முன்தினம் (5) இரவு தனது 74ஆவது வயதில் காலமானார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம். முக்தாரின் தாய் மாமனாவார். ஜனாஸா நேற்று 6 ஆம் திகதி ளுஹர் தொழுகையோடு சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. உலமாக்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பெருமளவிலான பொதுமக்கள் பங்குபற்றினர்.

# ஆடிப்பூர உற்சவம்

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ். துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தானத்தின் ஆடிப்பூர உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறும்.

இன்றையதினம் மாலை 6.00 மணிக்கு அபிஷேக பூஜைகள் ஆரம்பமாகும். அதனை தொடர்ந்து ருது ஷோபன விழா நடைபெறும்.

இதன் பின்னர் தேவஸ்தான வசந்த மண்டபத்துக்கு முன்பாக அனைத்து அடியார்களுக்கும் தர்ப்பை வழங்கப்பட்டு விசேட பூஜை வழிபாட்டுடன் குங்கும அர்ச்சனை நடைபெறுமென, துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் காளிகாம்பாள் உள்வீதி வலம் வந்து, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வெளி வீதி வலம் வருவாரெனவும், தேவஸ்தான நிர்வாகத்தினர் கூறினர்.

# வடமேல் மாகாண சபை சிற்றுண்டிச்சாலை; ஊழியர்களின் வருமானம், வாழ்வாதாரம்

## ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் ஆராய்வு

வடமேல் மாகாண சபையின் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரம் குறித்து ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் சென்று ஆராய்ந்தார்.



வடமேல் மாகாணத்தில் உள்ளடங்கியுள்ள புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் தூரப்பிரதேசங்களில் இருந்து மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் மாகாண சபை அலுவலக வளாகத்திற்கு வந்துசெல்கின்றனர்.

இவர்களுக்கு குறைந்த விலையில் தரமான உணவுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்த ஆளுநர், நேற்றைய தினம் திடீரென்று சிற்றுண்டிச்சாலையில் ஆய்வொன்றை மேற்கொண்டார். அத்துடன் சிற்றுண்டிச்சாலைக்கு வருகை தந்திருந்த பொது மக்களின் கருத்துக்களையும் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்ட அவர், மாகாண சபை அலுவலகத்தொகுதிக்கு வரும் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் தங்கள் பொருளாதார வசதிக்கேற்ப தரமான உணவுகளை உட்கொள்ளப் பொருத்தமான முறையில் சிற்றுண்டிச்சாலை செயற்படவேண்டும் என்பதை ஆளுநர் நஸீர் அஹமட் இதன் போது வலியுறுத்தினார். மேலும் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் வருமானம், அவர்களின் வாழ்வாதாரம் குறித்த விடயங்களையும் ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.



குருவிகொட்டுவ பகமுன, ஹாதியா கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவிகள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு நேற்று (06) கொழும்பு வந்தனர். கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ராஜுஸ் ஆசிரியர் தலைமையில் வந்த இவர்கள், லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் லேக்ஹவுஸ் முன்றலில் குழுவாக எடுத்துக்கொண்ட படம்.

# மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வைத்தியசாலை வளாகத்தில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதுடன், இத்தாக்குதலை நடத்திய மூவரில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் காயமடைந்த நபருடன் வந்த நால்வரே இவ்வாறு பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது மூவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் ஒருவரை ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த 22 வயதுடைய பாதுகாப்பு உத்தியோகத்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாண புத்தக திருவிழா

'யாழ்ப்பாண புத்தக திருவிழா 2024' நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டும் இவ்வாறான ஒரு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்தது. அனைத்து தரப்பினருக்குமான புத்தகங்களையும் பல்வேறுபட்ட விற்பனையாளர்களையும் ஒன்றிணைத்து இப்புத்தக திருவிழா இம்முறை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை சிறப்புற நடத்துவதற்கு அனுசரணையாளர்களை தயவுடன் வரவேற்பதாகவும் இதற்கு அனுசரணை வழங்க விரும்புபவர்கள், +94703663603 அல்லது 0212226068 ஆகிய இலக்கங்களில் தொடர்புகொள்ளுமாறும் இதன் ஏற்பாட்டாளர் குலசிங்கம் வசீகரன் கேட்டுக்கொண்டார்.

# வங்கி முகாமையாளரது மோ.சைக்கிள் அபகரிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு, அறுகுவெளி பிரதேசத்தில், ஏ 32 வீதியில் வங்கி முகாமையாளர் ஒருவரது மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.00 மணியளவில் இனந்தெரியாத குழுவொன்றால் பறித்துச் செல்லப்பட்டதுடன், இதன்போது வங்கி முகாமையாளரும் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசாங்க வங்கியில் முகாமையாளராக பணியாற்றுபவரது பல்சர் ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு பறித்துச் செல்லப்பட்டதாகவும் வங்கி முகாமையாளரை அடித்துப் பறித்தே மோட்டார் சைக்கிள் பறிக்கப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த வங்கி முகாமையாளர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் பாதிக்கப்பட்ட வங்கி முகாமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குழந்தையை சித்திரவதை செய்ததாக ஒப்புக்கொண்ட தாய்க்கு விளக்கமறியல்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், அளவெட்டி பிரதேசத்தில் ஒன்றரை மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அக்குழந்தையின் தாயை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

அத்துடன் மேற்படி தாயை மனநல மருத்துவரிடம் முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிக்கை பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த சனிக்கிழமை தாய்ப்பால் அருந்திய பின்னர் குழந்தை அசைவின்றி காணப்பட்டதாக அளவெட்டி வைத்தியசாலையில் குழந்தையை அனுமதித்ததை தொடர்ந்து அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தது.

குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அதன் கை, கால்களின் எலும்புகளில் முறிவு, தலையில் பலமாக தாக்கப்பட்ட காயம், கண்டல் காயம் ஆகியவை கண்டறியப்பட்டன. இந்நிலையில் குழந்தையின் மரணம் இயற்கையான மரணமல்லவென்று அறிக்கையிடப்பட்டது.

இதனை அடுத்து குழந்தையின் தாயை பொலிஸார் கைது செய்து விசாரணையை முன்னெடுத்தனர். அதன்போது குழந்தை பால் அருந்த மறுத்தமையால் கை, கால்களை திருகியதாகவும் குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டிருந்தால் தலையை சுவரில் மோதியதாகவும் குழந்தையின் கால்களை தான் ஏறி மிதித்ததாகவும் காதுக்குள் பிரம்பை விட்டு குத்தியதாகவும் விசாரணையில் அத்தாய் தெரிவித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர் மேற்படி தாயை பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே மேற்படி உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.


## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

### விலைமனுக் கோரல்

### இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டடங்கள் கட்டும் மற்றும் புதுப்பிக்கும் வேலைகளுக்கான தொழிலாளர்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம்

01 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டிடங்கள் கட்டும் மற்றும் புதுப்பிக்கும் வேலைகளுக்கான தொழிலாளர்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த மற்றும் தகைமையுடைய மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தற்போது அழைக்கின்றது.

02 ஆர்வமுள்ள மனுதாரர்கள் அலுவலக நேரங்களில் வேலைகள் பொறியியலாளர்/பராமரிப்பு பிரிவு (தொ.பே:011-2881247) மற்றும் ஆதன நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தொலைபேசி 0112881286) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் இடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தேவையான ஆவணங்கள் ஆதன நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிருந்து 08 ஆகஸ்ட 2024 முதல் 29 ஆகஸ்ட் 2024 வரை, வேலை நாட்களில் காலை 0900 மணிமுதல் மதியம் 1500 மணிவரை, பல்கலைக்கழக காசாளர் (Shroff) க்கு செலுத்திய ரூபா 1000.00 இற்கான பற்றுசீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்

03 விலைமனுப்பத்திரங்கள் முழுமையாகப் பூத்திசெய்யப்பட்டு "மூலப் பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிட்டு இரு வெவ்வேறு கடித உறைகளில் இடப்பட்டு பின்னா் அவை ஒரே கடித உறைகளில் இடப்படல் வேண்டும். மூன்று கடித உறைகளிலும் முத்திரையிடப்பட்டு இடது பக்கமேல் மூலையில் "இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டிடங்கள் கட்டும் மற்றும் புதுப்பிக்கும் வேலைகளுக்கான தொழிலாளர்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம்" என எழுதப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 30 ஆகஸ்ட் 2024 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னா் கிடைக்கக்கூடியவாறு தலைவா், திணைக்கள பெறுகை குழு (பிரதானம்), ஆதன நடவடிக்கைப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட அல்லது பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆதன நடவடிக்கைப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல்வேண்டும்.

04 விலைமனுக்கள் 30 ஆகஸ்ட் 2024 திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் 30 ஆகஸ்ட் 2024 அன்று பி.ப. 2.00 மணிக்கு ஆதன நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் மனுதாரா் அல்லது அவா்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்க முடியும்.

05 ஏதாவது ஒரு விலை மனுவினை அல்லது அனைத்து விலை மனுக்களையும் நிராகரித்தல், ஏதேனும் ஒழுங்கின்மைகளால் விலை மனுக்களை தள்ளுபடி செய்தல் மற்றும் தகுதிவாய்நத விலைமனுவை தெரிவுசெய்யும் உரிமை போன்றவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு உண்டு.

தலைவா்
திணைக்கள பெறுகை குழு (பிரதானம்)
ஆதன நடவடிக்கைப் பிரிவு
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.

2024.08.07


# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை; இருவர் கைது

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்றுகையிட்டுள்ள பொலிஸார், இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்தி செய்யும் 475 லீற்றர் கோடாவுடன் மூன்று பரல்கள் கொண்ட கோடாவையும் ஒட்டுசுட்டான் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் தொடர்பாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய ஒட்டுசுட்டான் பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பு மேற்கொண்டு கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டுள்ளதுடன், இச்சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு சிவநகர், மந்துவில் பிரதேசங்களைச் சேர்ந்த 37, 55 வயதுடைய சந்தேக நபர்களையே இவ்வாறு கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# உணவு திருவிழாவும் விற்பனை கண்காட்சியும்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண மாவட்ட உணவு திருவிழாவும் விற்பனை கண்காட்சியும் யாழ்ப்பாணத்தின் முற்றவெளி மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது.

இந்த உணவு திருவிழா மற்றும் விற்பனை கண்காட்சியின் மூலம் இத்துறையில் ஈடுபட்டுள்ள முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அத்துடன் தரமான உள்ளூர் உற்பத்திகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.அதேவேளைமாலை வேளைகளில் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

இந்தக் கண்காட்சியானது இன்று புதன்கிழமைவரை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 7 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
லுஹர் - 12.18
அஸர் - 03.38
மஃரிப் - 06.29
இஷா - 07.43

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 22
ராகுகாலம் : பகல் : 12.04 - 1.34வரை
சுபநேரம் : மாலை : 04.34 - 06.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி




# ரயில்வே காணிகளிலுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியேற்ற முடிவு

களனிவெளி ரயில் பாதை ஒதுக்கிடத்தில் குடியேறியுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை கொட்டாவ, மாலபல்ல பகுதியில் மீள்குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. பெங்கிரிவத்த ரயில் நிலையம் தொடக்கம் பாதுக்கை ரயில் நிலையம் வரை குடியேறியுள்ளவர்களே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

கொழும்பகே மாவத்தை வீடமைப்பு தொகுதி மற்றும் ரயில் பாதை வேலைத்திட்டத்தின் மூலம் கொட்டாவ மாலபல்லயில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் தொகுதியின் வீட்டு அலகுகளை பயன்படுத்தி இக் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன.



இதற்காக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாளிகாவத்தை லொகோ சந்தியிலிருந்து பாதுக்க ரயில் நிலையம் வரைக்குமான ரயில் பாதை ஒதுக்கிடத்தில் குடியேறியுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். பெங்கிரிவத்த ரயில் நிலையம் தொடக்கம் பாதுக்க ரயில் நிலையம் வரைக்குமான ரயில் பாதை ஒதுக்கிடத்தில் வசிக்கின்ற குடியிருப்பாளர்களில் அதிகமானோர் 30 ஆண்டுகளுக்கு மேலாக ரயில்வே பாதை ஒதுக்கிடத்தில் பாதுகாப்பற்ற விதத்தில் சட்டவிரோதமாக வசித்து வருகின்றனர். இவர்களில் 350 குடும்பங்களை மீள்குடியேற்ற தீர்மானிக்கப் பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு முதல் இதுவரை

# அலங்கார மீன் ஏற்றுமதியூடாக ரூபா 25,267 கோடி வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அலங்கார மீன்கள் ஏற்றுமதி மூலம் 2019ஆம் ஆண்டு முதல் இவ்வருடத்தின் கடந்த ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில்,(25,267.2 மில்லியன்) 25,267 கோடி 20 இலட்சம் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் 240.7 மெற்றிக் தொன் அலங்கார மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் 3236.2 மில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், மிலான் ஜயதிலக எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நாட்டில் 7974 பேர் அலங்கார மீன் தொழில் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

06

# ஊடகவியலாளர்கள், சமூக முன்னோடிகளின் கருத்துக்களை மதித்து தீர்மானம் எடுக்கப்படும்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அறிவிப்பு

**ஏ.ஜீ.எம்.தௌபீக்**

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் சமகால அரசியல் குறித்து ஊடகவியலாளர்கள்,சமூக முன்னோடிகள், புத்திஜீவிகளுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

விஷேட சந்திப்பை நடத்தியது. வெள்ளவத்தை கிறீன்பலேஸில் (05) நடந்த இந்தச் சந்திப்பில்,கட்சியின் தலைவர் ரிஷாட்பதியுதீன் எம்.பி.மற்றும் தவிசாளரான முன்னாள் எம்.பி.அமீர்அலி உட்பட உயர்பீட




உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தென்னிலங்கை நிலைப்பாடுகள் குறித்து இதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. தேர்தலில் யாரை

06

# பாடசாலைகளின் பாதுகாப்புக்கு காவலாளிகள் நியமனம் விரைவில்

சபையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தற்போது வெற்றிடமாகவுள்ள பாடசாலை காவலாளிகள் பதவிக்கு விரைவில் ஆட்சேர்ப்பை



மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் பாடசாலைகளின் கல்வி சாரா ஊழியர்கள் தரத்தில் இந்த காவலாளிகள் நியமனங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும் கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் காவலாளிகளுக்கான தட்டுப்பாடு தொடர்பில் மாத்தறை மாவட்ட

06

சர்வதேச உறவுகளுக்கான மேற்பார்வைக் குழு

# நாமல் ராஜபக்ஷ எம்பி விலகியதால் பிரேம்நாத் சி தொலவத்த எம்.பி.நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து, பொதுஜன பெரமுன எம்பி நாமல் ராஜபக்ஷ விலகியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையில் தெரிவித்தார்.



இது தொடர்பில் நேற்று சபையில் அறிவித்த சபாநாயகர், மேற்படி குழுவிலிருந்து நாமல் ராஜபக்ஷ விலகியதால், ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு (02) கூடியபோது பிரேமநாத் சி தொலவத்த நாமல் ராஜபக்சவின் வெற்றிடத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டதாகவும் சபாநாயகர்

06

## SLFP அலுவலகம் தடை உத்தரவு நீடிப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் திலங்க சுமதிபாலவினால், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டு மனு மீதான விசாரணையை தவிர்க்கும் வகையில், விடுக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனு, நேற்று (06) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் லஃபர் தாஹிர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் ஆட்சேபனைகள் இருப்பின், அவற்றை செப்டம்பர் (06) முன்வைக்குமாறு பிரதிவாதியான திலங்க சுமதிபாலவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொதுஜன ஐக்கிய பெரமுனவின் செயலாளரான திலங்க சுமதிபால, கொழும்பு டி. பி. ஜயா மாவத்தையில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகத்தில் இருந்த போது இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

06

அதிகபட்சம் ரூ.2,500 உயர்வை பெறும் வகையில்

# 83,000 அரச சேவை ஓய்வூதியம் பெறுவோர் முரண்பாடுள் நீக்கம்

அரச சேவையில் நிலவும் ஓய்வூதிய கொடுப்பனவு முரண்பாடுகளை நீக்க அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

25022016 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 03/2016 அட்டவணை எண் I இன் படி, ஓய்வு பெற்ற அதிகாரிகளின் ஓய்வூதியத்தை முழு

06


## ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோள் (EOI)

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**கொள்வனவு செய்யும் அமைப்பு: திறன் அபிவிருத்தி வாழ்க்கைத்தொழில் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு**

இலங்கையில் சந்தை தேவைப்பாடு மற்றும் தொழில்நுட்ப வாழ்க்கைத்தொழில் கல்வி பயிற்சி (TVET) துறையின் உண்மையான உற்பத்தியளவிற்குமிடையிலான இடைவெளியை அடையாளம் காண்பதற்காக வெளியக உசாத்துணையாளர்/ உசாத்துணை அணி/ நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்கான ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோள்.

இங்கே விபரிக்கப்பட்டுள்ள உசாத்துணை சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி வாழக்கைத்தொழில் கல்வி பிரிவின் சார்பாக அமைச்சு உசாத்துணையாளர்களின் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியுள்ள உசாத்துணையாளர்களை அழைக்கின்றார்.

இந்த பணிஒதுக்கீட்டின் இலக்கானது இலங்கையில் சந்தை தேவைப்பாடு மற்றும் தொழில்நுட்ப வாழ்க்கைத்தொழில் கல்வி பயிற்சி (TVET) துறையின் உண்மையான உற்பத்தியளவிற்குமிடையிலான இடைவெளியை அடையாளம் காண்பதாகும்.

உசாத்துணையாளர்களின் தகுதித்தன்மை:

உசாத்துணையாளர்/உசாத்துணை நிறுவனமானது சமூகபொருளாதார அபிவிருத்தி/ மனித முதலீட்டு அபிவிருத்தி தொடர்பான அரசாங்க துறையினால் தலைமைதாங்கிச் செல்லும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை ஆய்வு செய்வதற்காக ஈடுபட்டுள்ள பொருளாதார வல்லுநர்கள், TVET துறை வல்லுநர்கள் மற்றும் நிதியிடல் பகுப்பாய்வாளர்கள் ஆகியோர்களை அடக்கியிருத்தல் வேண்டும்.

உசாத்துணையாளரொருவர் /உசாத்துணை நிறுவனமானது உசாத்துணையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கலுக்கான வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஒத்திசைவான தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையிலான தெரிவு செய்தலின் கீழ் தெரிவு மேற்கொள்ள்ளப்படும். ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோளானது பின்வரும் தகவலை அடக்கியிருத்தல் வேண்டும்.

1. ஆய்வு மற்றும் உசாத்துணையாளர்/உசாத்துணை நிறுவனம் தொடர்பான தகவல்.
2. தகுதித்தன்மை (உசாத்துணையாளரானவர் இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் பட்டம் அல்லது இயையானது, பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும்/அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது ஏனைய அபிவிருத்தி தொடர்பான துறைகள் மற்றும் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு தொடர்பான தொழில்சார் அனுபவம் ஆகியவற்றில் கலாநிதிப் பட்டம் விருப்பத்திற்குரியது.
3. நிறைவேற்றப்பட்ட இயையான ஆய்வுகளின் பட்டியலொன்று மற்றும் TVET துறையின் விழிப்புணர்வு தொடர்பான சுயமதிப்பீடு.
4. உசாத்துணையாளர்/நிறுவனத்தின் அனுபவம் அடங்கலான தொழில்நுட்ப தகைமைகள்.
5. பதிவு செய்தலின் இருப்புநிலை
6. உசாத்துணையாளரினால்/நிறுவனத்தின் பிரகடனம்.

ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் www.moe.gov.lk மற்றும் www.skillsmin.gov.lk ஆகிய இணையதளங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆர்வ வெளிப்பாட்டிற்கான வெளிப்படுத்தல் படிவத்தை பதிவிறக்கம் செய்யலாம் அல்லது மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் கீழேயுள்ள முகவரியிலிருந்து கையேற்பதுடன் மேலதிக தகவலுக்காக பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்ட உசாத்துணையாளர்களுக்கு முன்மொழிவிற்கான தேவைப்பாடு (RFP) வழங்கப்படும்.

ஆர்வ வெளிப்பாடானது கீழேயுள்ள முகவரியில் 2024 ஓகஸ்ட் 21 ஆம் திகதியளவில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்-அமைச்சு உசாத்துணை பெறுகைக் குழு,**
**திறன்கள் அபிவிருத்தி வாழ்க்கைத்தொழில் கல்விப் பிரிவு,**
**‘‘நிபுநதா பியச”, இல. 354/2,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி: 0112136565/0112136000/0112136554**
**தொலைநகல்: 0112597690**
**மின்னஞ்சல்: dgplan@skillsmin.gov.lk/ranbweerasekara@gmail.com**



## விஷேட அறிவித்தல்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அனுமதிப்பத்திரம் பெற்ற சுமார் 980 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் பல்வேறு காரணங்களால் நீண்டகாலமாக வருடாந்தம் தமது தொழில் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கவில்லை. அதன் பிரகாரம், 1994 ஆம் ஆண்டின் 04 மற்றும் 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய, சம்பந்தப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், பணியகத்தின் தரவுக் கட்டமைப்பில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.**

**இந்த நிறுவனங்களுக்கு இலங்கையர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புவதற்கோ அல்லது அது தொடர்பில் பணம் அறவிடவோ அல்லது அதனுடன் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடவோ சட்டபூர்வ அதிகாரம் கிடையாது.**

**குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் விபரங்களை கீழே தரப்பட்டுள்ள QR குறியீட்டின் ஊடாக அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் www.slbfe.lk இன் இணையத்தளத்திற்கு பிரவேசித்து பரீட்சிக்க முடியும்.**

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு
www.slbfe.lk

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 31

## குறள் தரும் சிந்தனை



பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை

எந்தெந்த வழிகளில் ஆராய்ந்தாலும் வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்த துணை என்பதால், எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும்.

## தெங்கு நோய்த்தாக்கங்களுக்கு தீர்வு வழங்க விசேட நடவடிக்கை

அந்நிய செலாவணியை ஈட்டித் தரக்கூடிய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இது நாலா புறமும் கடலால் சூழப்பட்டுள்ள நாடான போதிலும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு உகந்த சீதோஷண நிலையையும் மண்வளத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

அந்த வகையில் தென்னை, தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் செய்கை பண்ணப்படும் நாடாக விளங்குகிறது இலங்கை. இவற்றில் தேயிலையும் இறப்பரும் பிரித்தானியரால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட பயிர்களாகும்.

தென்னை இந்நாட்டில் நீண்ட காலமாகக் காணப்படக்கூடிய ஒரு பெருந்தோட்டப் பயிராகும். இது இந்நாட்டு மக்களின் பொருளாதாரத்துடனும் சீவனோபாய வாழ்வாதாரத்துடனும் இந்து, பௌத்த வழிபாடுகளோடும் பின்னிப் பிணைந்த ஒரு பயிராக விளங்குகின்றது.

இந்நாட்டில் மன்னராட்சிக் காலம் முதலே இப்பயிர்ச்செய்கை ஊக்குவிப்பட்டு வருகின்றது. அத்தோடு மன்னர்களது காலம் முதல் இந்நாட்டு மக்களின் உணவோடு தேங்காய் இணைந்ததாக வரலாற்று பதிவுகள் உள்ளன. இவ்வாறு இந்நாட்டில் நீண்ட வரலாற்றை தென்னை கொண்டிருக்கிறது.

அந்த வகையில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தென்னை காணப்படுகின்ற போதிலும் புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பிராந்தியம் தெங்கு முக்கோண வலயமாக விளங்குகின்றது.

இது தேங்காய் அறுவடை அதிகளவில் கிடைக்கப்பெறும் பிராந்தியமாகத் திகழுகிறது.

தற்போது இந்நாட்டில் மூவாயிரம் மில்லியன் தேங்காய்கள் வருடமொன்றுக்கு அறுவடை செய்யப்படுகின்றன. அவற்றில் பெரும்பகுதி வீட்டுப் பாவனைக்காகவும் குறிப்பிடத்தக்களவில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு சிறுதொகை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றது. இவற்றின் ஊடாக அந்நியச் செலாவணியும் நாட்டுக்கு கிடைக்கப்பெறுக்கின்றன.

இதன் விளைவாக இந்நாட்டில் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான தெங்கு செய்கையாளர்கள் உள்ளனர். தெங்கு கைத்தொழில் துறையிலும் குறிப்பிடத்தளவிலானோர் தொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளனர். அத்தோடு தேங்காய் உள்ளிட்ட பல்வேறு தெங்கு பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றின் ஊடாக நாடு அந்நிய செலாவணியையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஆன போதிலும் நாட்டின் தெங்கு பயிர்ச்செய்கை பலவிதமான நோய்த்தாக்கங்களுக்கு அண்மைக் காலமாக முகம்கொடுத்துள்ளது. அவற்றில் வெள்ளை ஈ, சிவப்பு வண்டு, கறுப்பு வண்டு, வெலிகம தென்னை இலை நோய் ஆகியன குறிப்பிடத்தக்க நோய்களாக உள்ளன. இந்நோய்த் தாக்கம் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டதாக விளங்கிறது. அதனால் இந்நோய்த் தாக்கங்கள் தேங்காய் விளைச்சலிலும் அறுவடையிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நோய்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் இந்நாட்டின் தெங்கு செய்கை எதிர்நோக்கியுள்ள நோய்த் தாக்கங்கள் மற்றும் தெங்கு செய்கையாளர்களின் கோரிக்கைகள் என்பன குறித்து விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சருமான மஹிந்த அமரவீர கவனம் செலுத்தியுள்ளார்.

அந்த அடிப்படையில் தெங்கு செய்கையாளர்கள் முகம்கொடுத்துள்ள தெங்கு நோய்த் தாக்கங்களுகக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு முன்னெடுத்துள்ளது. இந்நடவடிக்கையின் கீழ் 1916 என்ற உடனடி தொலைபேசி இலக்கமும் coconut app என்ற செயலியும் நேற்று முன்தினம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உடனடி தொலைபெசி இலக்கம் மற்றும் செயலி ஊடாக தெங்கு செய்கையாளர்கள் முகம்கொடுத்துள்ள நோய்த் தாக்கப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலான ஆலோசனைகளும் அறிவுரைகளும் மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகளின் ஊடாக நாட்டின் தெங்கு செய்கை முகம்கொடுத்துள்ள நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்' என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த விஷேட வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்த அமைச்சர் மஹிந்த அமரவீர, தெங்கு செய்கை முகம்கொடுத்துள்ள நோய்த்தாக்கங்களை இந்நடவடிக்கையின் ஊடாகக் கட்டுப்படுத்தவும் தேங்காய் அறுவடையை 3,600 மில்லியன்களாக அதிகரிக்கவும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்

ஆகவே உள்நாட்டு தெங்கு செய்கை முகம்கொடுத்துள்ள நோய்த்தாக்கங்களை கட்டுப்படுத்தவென வழங்கப்படும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அது தெங்கு விளைச்சலையும் அறுவடையையும் அதிகரிக்க வழிவகை செய்யும். அதற்கு ஏற்ப செயற்படுவது தெங்கு செய்கையாளர்களின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# அம்மனுக்குரிய நாள் ஆடிப்பூரம்; பக்தர்களால் இன்று அனுஷ்டிப்பு

அம்மனுக்கு உரிய நாளான ஆடிப்பூரம் இன்றாகும். அம்பாளுக்கும் ஆண்டாளுக்கும் உரியது ஆடிப்பூரம் நாள். இன்றைய நாளில்தான் அம்பாள் பெண்மை அடைந்ததும், உமாமகேஸ்வரியாக அவதரித்ததும், ஆண்டாளாக அவதரித்ததுமாகும். இதனால்தான் அம்மன் ஆலயங்களில் சடங்குகள், சம்பிரதாயங்கள், விஷேட பூசைகள் நடைபெறுகின்றன.

இந்த நாளில் அம்மனுக்கு மஞ்சள் காப்பு, சந்தனக் காப்பு, குங்குமக் காப்பு, வளைகாப்பு, வளையல் அலங்காரம் ஆகியவை பக்தர்களால் நடத்தப்படுகின்றன.

ஆடிப்பூர தினத்தை வளைகாப்பு நாளாகக் கருதி அம்பாளுக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். ஆடி மாதம் அம்பாளுக்குரிய ஐந்தாவது மாதம் என்பதால் வளைகாப்பு மாதமாக அனைத்து அம்மன் ஆலயங்களிலும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இன்று புதன்கிழமை அம்பாள் ஆலயங்களில் விசேட பூசை இடம்பெறுகின்றன.

திருமணம், குழந்தை வரம் மட்டுமன்றி, குடும்ப நலனுக்காகவும் பக்தர்கள் ஆடிப்பூர தினத்தில் வேண்டுதல் வைத்து வழிபடுகிறார்கள். இது ஆண்டாள் ஜெயந்தியாகவும் கொண்டாடப்படுகிறது.



ஆடி மாதத்தில் வருகின்ற மிக முக்கியமான வழிபாட்டு நாட்களில் ஒன்று ஆடிப்பூரம். இது அன்னை உமாதேவி மற்றும் ஆண்டாள் நாச்சியாரின் அவதாரத் திருநாளாகும். இந்த நாளில் அம்மனை விரதம் இருந்து வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணமும், நீண்ட காலமாக குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வரமும் கிடைக்கும் என்பது ஐதீகம். அதனால் இந்த நாளில் அனைத்து அம்மன் கோவில்களிலும் அம்மனுக்கு வளையல் வாங்கிக் கொடுத்து பக்தர்கள் வழிபடும் வழக்கம் உள்ளது.

சில கோயில்களில் அம்மனுக்கு வளைகாப்பு திருவிழாவும் ஆடிப்பூரத்தன்று நடத்தப்படுவது வழக்கம்.இந்த ஆண்டில் ஒகஸ்ட் 6 ஆம் திகதி மாலை 06.42 மணி தொடங்கி, ஒகஸ்ட் 7 ஆம் திகதி இரவு 09.03 வரை பூரம் நட்சத்திரம் உள்ளது. இன்று புதன்கிழமை என்பதால் காலை 07.30 முதல் 9 மணி வரை எமகண்ட நேரமும், பகல் 12 முதல் 01.30 வரையிலான நேரத்தில் ராகு காலமும் உள்ளது. இதனால் இந்த நேரங்களைத் தவிர்த்து விட்டு அம்மனுக்குரிய வழிபாட்டினை செய்யாலாம்.

எனவே ஆடிப்பூர வழிபாட்டு நேரம் இன்று காலை 6 முதல் 07.15 வரை மற்றும் காலை 09.05 முதல் 10.20 வரை ஆகும்.

வி.ரி சகாதேவராஜா
காரைதீவு குறூப் நிருபர்

# புலம்பெயர் மண்ணில் தமிழை வளர்க்கும் கடமை எமக்குள்ளது

## பிரிஸ்பேர்ன் நகரில் நடைபெற்ற மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வில் ஐங்கரன் விக்கினேஸ்வரா உரை

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக (Mt Ommaney Library) மண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி ரதிதேவி கந்தசாமி ஆற்றினார். தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடினர். இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றினார். பின்னர் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

அதன் பின்னர் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டொக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார். இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் நிகழ்த்தினார். தமிழக இலக்கிய ஆர்வலாராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி அவர் சிறப்புற உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வினை பிரிஸ்பேர்ன் சுதா சிறப்புற தொகுத்து அளித்தார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற இந்நூல்கள் வெளியீடு மற்றும் இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன்வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.



நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார். "தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது" என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

நூல் வெளியீட்டு விழாவின் ஏற்புரையில் அவர் பேசுகையில், "புத்தக வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்துச் செல்லும். படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாகும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம். எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகின்றன. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமை உள்ளது. புலம்பெயர் மண்ணில் தமிழை வளர்த்தெடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.





அக்கடமை எமக்குள்ளது. நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்" என்று குறிப்பிட்டார்.

# ஷேக் ஹசீனாவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு செயற்பட்டது யார்?

## இந்திய ஊடகங்கள் கூறுகின்ற தகவல்!

பங்களாதேஷில் நடந்த மாணவர்கள் போராட்டம் தற்போது வன்முறையாகி உள்ளது. வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவுக்கு தப்பி வந்துள்ள நிலையில், அந்நாட்டின் வன்முறை மற்றும் ஷேக் ஹசீனாவின் ஆட்சியை கவிழ்த்தது உள்ளிட்டவற்றின் பின்னணியில் பாகிஸ்தானின் உளவு அமைப்பின் ஐ.எஸ்.ஐ இருப்பதாக இந்திய பாதுகாப்புத் தகவல்களை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெ ளியிட்டுள்ளன.

பங்களாதேஷ் வன்முறை மூலம் ஐ.எஸ்.ஐ அமைப்பு இந்தியாவையும் குறிவைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தியாவில் தற்காலிகமாக தங்கியிருக்கும் ஷேக் ஹசீனா அதன்பிறகு பிரிட்டன் சென்று தனது சகோதரியுடன் அடைக்கலம் தேட உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐ.எஸ்.ஐ என்பது பாகிஸ்தான் நாட்டின் அதிகாரபூர்வ உளவு மற்றும் புலனாய்வு அமைப்பாக உள்ளது.இந்த அமைப்புதான் வங்கதேசத்தில் மாணவர்களை வைத்து பதற்றத்தை ஏற்படுத்தி அந்நாட்டு



பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சியை கவிழ்த்துள்ளதாக இந்திய புலனாய்வு செய்தியை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

'ஐ.எஸ்.ஐ அமைப்பின் முக்கிய நோக்கம் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியின் அரசை கலைப்பதுதான். ஏனென்றால் ஷேக் ஹசீனாவின் கட்சி இந்தியாவை ஆதரிக்கிறது. இதனை பாகிஸ்தான் விரும்பவில்லை. மாறாக ஷேக் ஹசீனாவுக்கு பதில் பாகிஸ்தான் நாட்டுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் இருக்கும் வங்களாதேஷ் தேசியவாதக் கட்சியை (பி.என்.பி) ஆட்சியை கொண்டு வருவதுதான் ஐ.எஸ்.ஐ இன் நோக்கமாக உள்ளது. அதாவது வங்கதேசத்தில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களின் ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று ஐ.எஸ்.ஐ அமைப்பு செயற்பட்டு வருகின்றது. ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை விட்டு விலகி நாட்டை விட்டு வெளியேற ஐ.எஸ்.ஐ அமைப்பை சேர்ந்தவர்கள் மாணவர் போர்வையில் செயற்பட்டுள்ளனர்' என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மருதாணிக்கலை பாடநெறி டிப்ளோமா சான்றிதழ் வைபவம்

Mehndi TATS Annual awarding ceremony_ 2024 மருதாணிக் கலை பாடநெறியை பூர்த்தி செய்து டிப்ளோமா பட்டம் பெற்ற அழகியற்கலை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் பொலன்னறுவை ஹொட்டல் மஹனுகயில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க, முன்னாள் வடமத்திய மாகாணசபை உறுப்பினர் எஸ்.எம்.அன்சார், இலங்கையில் புகழ் பெற்ற அழகுக்கலை நிபுணர் Dr.ப்ரியா சன்கர், மட்டக்களப்பு மாவட்ட அழகுக்கலை சங்கத் தலைவர் வனிதா செல்லபெருமாள், பொலன்னறுவை மாவட்ட பிரசித்தி பெற்ற அழகுக்கலை நிபுணர் மாலா குணவர்தன மற்றும் அறிவிப்பாளர் சமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Mehndi TATS மருதாணிக் கலைபீடத்தின் தலைவி பாத்திமா அஸ்றா யாஸீன் தலைமையில் இயங்கும் இக்கலைக் கூடத்தில் இரண்டு வருடங்களில் 44 முஸ்லிம், தமிழ், சிங்கள யுவதிகள் மருதாணிக் கலை டிப்ளோமா பட்டத்தைப் பெற்று வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசமான்ய
எம்.ஏ.எம். ஹசனார்





# அமைச்சரவை முடிவுகள்




**1. கொலன்னாவ வெள்ளப்பெருக்கு நிலைமை**

கொலன்னாவ பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு தேவையான விதந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும், கொலன்னாவ நகர மீள் கட்டமைப்புக்கான விரிவான அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிப்பதற்காக கொழும்பு மாவட்டச் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.06.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த விதந்துரைகளை சரியாக ஆராய்ந்த பின்னர் பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் ஊடாக அமுல்படுத்துவதற்கும், அது தொடர்பான தேவையான வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்புக்காக பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2. இந்தோனேசியா இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (ISLPTA)**

இந்தோனேசியா இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (ISLPTA)தொடர்பாக இரண்டாவது வர்த்தகப் பேச்சுவார்த்தைக் குழுக் கூட்டம் 2024.07.15 மற்றும் 16 ஆகிய தினங்களில் கொழும்பில் நடாத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தோனேசியா இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடல்களை 2024 டிசம்பர் மாதமாகும் போது பூர்த்திசெய்வதற்கும் 2025 மார்ச் மாதத்தில் குறித்த வர்த்தக ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் இருதரப்பு உடன்பாடு எட்டப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டு ஜனாதிபதி சமர்ப்பித்த விடயங்களை அமைச்சரவை கவனத்தில் கொண்டுள்ளது.

**3. சமுத்திரவியல் கற்கைகளுக்கான பிராந்திய நிலையத்தை இலங்கையில் தாபித்தல்**

இலங்கையானது, இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகளின் ஒன்றியத்தின் (IORA) உறுப்பு நாடாக சமுத்திரப் பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக மேற்கொண்டுள்ள பல்வேறு தொடக்க முயற்சிகளைக் கருத்திற் கொண்டு, பொதுவான கற்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் விடயங்கள் மற்றும் நடவடிக்கைகளை பிராந்தியம் முழுவதும் பகிர்ந்து கொள்ளும் வகையில் 'பிராந்திய சமுத்திரவியல் கற்கை நிலையமாக' இலங்கையை நிறுவுவது மிகவும் பொருத்தமானதென பிரான்ஸ் அரசு அடையாளங்கண்டுள்ளது. அதற்கமைய, உத்தேச 'பிராந்திய சமுத்திரவியல் கற்கை நிலையத்தை' தாபிப்பதற்கு ஏற்புடைய இலங்கை அரசு மற்றும் பிரான்ஸ் அரசுக்கிடையிலான இருதரப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4. அரச சேவையின் வினைத்திறனையும் தரப்பண்பையும் அதிகரித்தல்**

அரச நிறுவனங்களில் வினைத்திறனையும் தரப்பண்பையும் அதிகரிப்பதற்காக மேற்பொருந்தல் தவறுகளை குறைப்பதற்காகவும், தகவல்களை உறுதிப்படுத்துவதன் மூலம் உற்பத்தி திறன் மற்றும் சிறப்பாக பணிகளை நிறைவேற்றுவதற்காக அரச நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப முறைமையை ஒருங்கிணைத்தல் பொருத்தமானது என கண்டறியப்பட்டுள்ளது. நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**5. சிறுவர் பகல் பராமரிப்பு வசதிகள் தொடர்பான தேசியக்கொள்கை**

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்களில் ஒரேவிதமான நடவடிக்கை முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கும் முறைசார்ந்த வகையில் பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை பொறிமுறையை அறிமுகப்படுத்தும் நோக்கில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் 2017ஆம் ஆண்டில் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**6. பெங்கிரிவத்த புகையிரத நிலையம் தொடக்கம் பாதுக்க புகையிரத நிலையம் வரைக்கும் களனிவெலி புகையிரதப் பாதை ஒதுக்கிடத்தில் குடியேறியுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றல்**

கொழும்பு நகரை அண்டிய புகையிரத வீதி வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி மாளிகாவத்தை லொகோ சந்தியிலிருந்து பாதுக்க புகையிரத நிலையம் வரைக்கும் புகையிரதப் பாதை ஒதுக்கிடத்தில் குடியேறியுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியமர்த்தப்படுவதுடன், தற்போது கிருலப்பன புகையிரத நிலையம் வரைக்குமான பகுதியில் சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பெங்கிரிவத்த புகையிரத நிலையம் தொடக்கம் பாதுக்க புகையிரத நிலையம் வரைக்குமான பகுதியின் புகையிரத ஒதுக்கிடத்தில் வசிக்கின்ற குடியிருப்பாளர்களில் அதிக சதவீதமானோர் 30 ஆண்டுகளுக்கு மேலாக புகையிரத ஒதுக்கிடத்தில் பாதுகாப்பற்ற விதத்தில் சட்டவிரோதமாக வசித்துவருவதுடன், அவர்களில் 350 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு அடையாளங்காணப்பட்டுள்ளது. குறித்த குடும்பங்களுக்கு வீட்டுவசதிகளை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**7. விவசாய வனவியல் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம் மற்றும் ஏற்றுமதி விவசாய திணைக்களத்துக்குமிடையிலான உபகரணங்களை ஒப்படைப்பதற்கான ஒப்பந்தம்**

பசுமை காலநிலை நிதியத்தின் மூலம் நிதி வழங்கப்படுகின்றதும் விவசாய வனவியல் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்ற நக்கிள்ஸ் மலைத்தொடரில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள ஆற்றுப்படுக்கைகள், நீர்மூலப் பிரதேசங்கள் மற்றும் கீழ்ப் பள்ளத்தாக்கு பிரதேசங்களில் குடியேறி தங்கிவாழும் விவசாயிகளின் மற்றும் விவசாயப் பெருந்தோட்டசமூகத்தவர்களின்காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைகின்ற திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் நீர்ப்பாசன அமைச்சால் நக்கிள்ஸ் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கமைய குறித்த உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு அந்நிறுவனம் மற்றம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. வணிக மட்டத்திலான ஃபூட்சால் உள்ளக விளையாட்டரங்கை நிறுவுதல்**

ஃபூட்சால் என்பது, செயற்கையாக ஒரு விளையாட்டு மைதானத்தில் விளையாடப்படும் காற்பந்து சார்ந்த விளையாட்டாகும். இவ்விளையாட்டுக்கு 40X20 மீற்றர்களும் உயரம் 04 மீற்றர்களுமான உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவர். சமகாலத்தில் இலங்கையின் நகரங்களை அண்டிய பகுதிகளில் ஃபூட்சால் உள்ளக விளையாட்டரங்குகள் சில நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்விளையாட்டுக்கு அதிகளவு கேள்வி நிலவுவதுடன், அரச – தனியார் பங்குடமை முறையின் கீழ் தனியார் முதலீட்டாளருக்கு காணியை குத்தகை அடிப்படையில் வழங்கி அரசுக்குச் சொந்தமான விளையாட்டரங்குகள் மற்றும் காணிகளைப் பயன்படுத்தி ஃபூட்சால் விளையாட்டை விரிவாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, அடையாளங்காணப்பட்டுள்ள காணிகள் மற்றும் விளையாட்டரங்கு வளாகங்களில், உயர்ந்தபட்சம் 30 வருடகாலத்திற்கு ஃபூட்சால் விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதற்காக, அரச பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடித்து தனியார் முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கும், குறித்த முதலீட்டாளர் மூலம் பாகிஸ்தான் அரசின் நன்கொடையாக வழங்கப்படும் 02 செயற்கை ஃபூட்சால் தளங்களை டொரின்ரன் மற்றும் சுகததாச விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதற்கும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முன்மொழியப்பட்ட தம்புள்ள தொழிநுட்ப வளாகம் (Campus)**

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சிவில் மாணவர்களுக்கு தனது சேவைகளை விரிவாக்கம் செய்யும் நோக்கில் தம்புள்ள நகரில் தொழிநுட்ப வளாகமொன்றை (Campus) தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த தொழிநுட்ப மண்டபத்தைத் தாபிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவுதல்**

தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி அமைப்புக்கு சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு 2021.10.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைய சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (SDP) சலுகையுடன் கூடிய CHEC PORT CITY COLOMBO (PRIVATE) LIMITED க்கு வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியை நீடித்தல்**

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்டுள்ளகருத்திட்டமான கொழும்புத் துறைமுக நகரத்தை நிர்மாணிக்கும் பணிகள் CHEC PORT CITY COLOMBO (PRIVATE) LIMITED இற்கு 2016 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் மேலும் எஞ்சியுள்ள பணிகளைப் பூர்த்தி செய்வதற்கும், குறித்த வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குமான கருத்திட்டக் காலப்பகுதியை 2027.06.30 வரை நீடிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் சேவை நாட்டின் முன்னேற்றத்துக்கு தேவை

எந்தவொரு தொழிலின் சிறப்புக்கும் வெற்றிக்கும் அர்ப்பணிப்பு என்பது முக்கியமானது. அர்ப்பணிப்புடன் செயற்படும் போதுதான் எடுத்த கருமம் வெற்றியடையும். அந்த அர்ப்பணிப்பு மனத்திருப்தியைத் தரும், முழுமை பெறும்.

தற்கால ஆசிரியத் தொழிலில் அர்ப்பணிப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஓர் ஆசிரியர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதில் காலத்திற்கூடாக மாறுபட்ட சமூகங்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்துள்ளன. கிரேக்க மரபில் ஆசிரியர் கற்பனை நிறைந்த கவிஞன் போலவும், சிந்தனை நிறைந்த ஞானி போலவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டார். சிந்தனை சுதந்திரமுள்ளவராகவும், எதனையும் ஆழமாகச் சிந்திக்கும் போக்குடையவராகவும் விளங்கும் ஆசிரியர் தன்னிடம் பயிலும் மாணவர்களை அத்தகைய வளர்ச்சிக்கும் பக்குவத்திற்கும் கொண்டு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. உரோம மரபில் ஆசிரியர் கட்டுப்பாட்டிற்கும், ஒழுக்கத்திற்கும் உரியவராகக் கருதப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாட்டினர் நல்லவராக, அறிவு ஆற்றலுடையவராக ஆசிரியரை நோக்கினர். ஆங்கிலேயர் அறிவு ஆற்றலுடன் பரந்த ஈடுபாடுகள் கொண்டவராக ஆசிரியரைக் கண்டனர்.

தத்துவஞானி ரூசோ 'ஆசிரியன் போதனையிலும் சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த அறிஞனாக விளங்க வேண்டும், அவன் மற்றவர் துன்பத்தைத் துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்' என்றார். குழந்தை கல்விச் சிந்தனையாளர் மொன்டசூரி அம்மையாரோ 'ஆசிரியர் பிள்ளைகளிடம் அன்னையைப் போல் அதிக அக்கறை காட்ட வேண்டும்' என்றார்.

டொக்டர் அப்துல்கலாம், ஆசிரியர் பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகளையும் இங்கு கோடிட்டுக் காட்டுதல் பொருத்தமானதாக இருக்கும். 'நீங்கள் எத்தகைய ஆற்றலுள்ள ஆசிரியர்களாகவும் இருக்கலாம். ஆனால் உங்களுக்கான சிறப்பான பெரும் பொறுப்பும் பங்கும் மாணவர் சமூகம் பொறுத்து எதிர்கால நாட்டின் வளர்ச்சி பொறுத்து உள்ளது. ஏனெனில் வேறு எவரையும் விட நீங்கள்தான் எதிர்கால மாணவர் சமூகத்தை, நாட்டின் தலைவிதியை வடிவமைக்கப் போகின்றவர்கள். அதற்கு உள்ளிருக்கும் உங்களை நீங்கள் உணர வேண்டும். அது நீங்கள் காட்டும் ஈடுபாட்டிலும் அர்ப்பணிப்புத் தன்மையிலுமே தங்கியுள்ளது' என்றார் அவர். ஆனால் இன்றைய சூழலில் ஆசிரியர் 'அர்ப்பணிப்புடன்' செயலாற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு மேலோங்கிக் காணப்படுகிறது. அதில் உண்மையும் இல்லாமலில்லை. வகுப்பறையின் உள்ளும் புறமுமான நடைமுறைச் செயற்பாடுகள் பல ஆசிரியரின் அக்கறையற்ற தன்மையை, அலட்சியப்போக்கினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன எனலாம். ஒரு ஆரம்பப் பாடசாலை ஆசிரியருக்குப் பாட அறிவை விட, குழந்தை உளவியல் கூடுதலாகத் தேவைப்படுகிறது.



ஆசிரியர்கள் காலத்திற்கேற்றபடி தொழில் முறையில் முன்னேற்றிக் கொள்பவராகவும் அவற்றை வகுப்பறையில் செயல்படுத்துபவராகவும் நிலைநிறுத்திக் கொள்வது அவசியமாகிறது. ஆசிரியர்களிடம் இன்று அர்ப்பணிப்புத்தன்மை குறைந்திருப்பதற்கான காரணங்களைப் பின்வருமாறு நோக்க முடியும். அதிலே பிரதானமானதாக ஆசிரியர் தொழிலை உண்மையான ஆர்வத்துடனும், விருப்புடனும், ஏற்றுக் கொள்ளாமல் ஏதோ தொழில் இருந்தாலே போதும் என்ற ஒரேயொரு காரணத்தினை வைத்துக் கொண்டு செயற்படுவதனை நோக்கலாம். மேலும் இன்று பெரும்பான்மை ஆசிரியர்கள், தங்கள் பாடசாலையையும் மாணவர்களுக்கான பாடநூலையும் தவிர வேறு உலகம் அறியாதவர்களாக உள்ளனர். அல்லது அறிந்து கொள்ள விரும்பாதவர்களாக உள்ளனர். வெகுஜன ஊடகங்களில் வரும் மேம்போக்கான தகவல்களை மட்டுமே அறிந்திருக்கின்றனர். சாதாரண சினிமா ரசிகர்களாக, வானொலி அரட்டையில் லயிப்பவர்களாக, நாடகத் தொடரில் பொழுது போக்குபவர்களாக, மின்னூடகச் சலசலப்புகளையே அறிவின் உச்சங்களாக நம்புபவர்களாக, தமது சமூகத்தில் இருந்து கொஞ்சமும் வெளியே வராதவர்களாக, எல்லா சமய சமுதாய மூடப்பழக்கங்களையும் விட்டுக் கொடுக்காமல் பின்பற்றுபவர்களாக, அவர்களின் வாழ்க்கை சுருங்கிவிட்டது.

பொதுவெளியில் ஈடுபடுவதோ, பொதுவிடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதோ மிகவும் குறைந்துவிட்டது. சாதாரணமாக இன்று ஆசிரியர் தொழிலானது வெறுமனே வியாபார நோக்கில் செல்வதனை நாம் காணலாம். அதாவது தொழில் என்ற வகையில் பாராது இதனை ஒரு சேவையாக செய்வோர் மிகவும் குறைவாகும். ஆகவே மேற்கண்ட வகையில் நோக்கும் போது எமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்று ஆசிரியர்களிடம் போதியளவிலான அர்ப்பணிப்பு, ஈடுபாடு காணப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. எம் மண்ணிலே எத்தனையோ ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்திற்குப் பெருமை சேர்த்தவர்களாக வாழ்ந்தார்கள், சிலர் வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். எனவே எமக்கு முன்னிருக்கும் பாரிய பொறுப்புணர்ந்து மென்மேலும் முழு மனதுடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்ற வேண்டியது ஆசிரியர்களுக்கு காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது.

*முஹம்மத் நவாஸ் பாத்திமா நதீஹா*
*நான்காம் வருட கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவி*
*கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

# மாணவர்களை சமூகமயமாக்குவதில் பாடசாலை சட்ட திட்டங்களின் வகிபாகம்



மாணவர்களின் ஒழுக்கத்தையும், விழுமியங்களையும், ஆளுமையையும் விருத்தி செய்து அறிவுசார் விருத்தியில் மாத்திரமில்லாது திறன் பண்புசார் விருத்தியிலும் மேல்நிலை அடையச் செய்யும் அனைத்து விதமான விதிமுறைகளும் பாடசாலை சட்ட திட்டம் எனப்படும். பாடசாலை ஆரம்பமாகி நிறைவடையும் வரையிலான அனைத்து விதமான செயற்பாடுகளும் பாடசாலை சட்டதிட்டத்திற்குள் அடங்குகின்றன.

இலங்கைப் பாடசாலைகளில் சட்டவிதிமுறைக்கு அமைய பிள்ளைகளை ஆறு வயது முதல் பாடசாலையில் இணைத்துக் கொள்கின்றனர். அவ்வாறு இணைத்துக் கொண்டதில் இருந்து பாடசாலை சட்ட விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற விடயமும் முக்கியமானதாகும். அந்த வகையில் சமூகமயமாக்கல் என்பது சமூகத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதல் என வரைவிலக்கணப்படுத்தலாம். மாணவர்களை சமூகமயப்படுத்துவதில் பாடசாலை சமூகத்துடன் இணைந்து பாடசாலை சட்டதிட்டங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

பாடசாலை சட்டவிதிமுறைகளுக்குள் மாணவர் ஒழுக்கக்கோவை சிறப்பான இடம் வகிக்கின்றது. இதில் மாணவர்கள் பாடசாலை மற்றும் வெளியிடங்களில் எவ்வாறான ஒழுக்க விதிமுறைகளின்படி நடந்து கொள்ள வேண்டும், அதேபோல் எந்த இடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதாக மாணவர் ஒழுக்க கோவை அமைகின்றது.

பாடசாலையில் நேர முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைப் பின்பற்றியே அனைத்து விடயங்களும் நடைபெறுகின்றன. இதனால் வாழ்க்கையில் நேரத்தின் பெறுமதியை அறிந்து அதற்கேற்ப வேலைகளை திட்டமிட்டு உரிய நேரத்திற்குள் செய்து முடிக்கும் மனப்பக்குவ நிலையை மாணவர்கள் அடைந்து கொள்கின்றனர்.

பல்வேறு சமூகங்களில் இருந்து வருகை தரும் மாணவர்கள் பல்வேறு பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக காணப்படுவர். அவர்களை ஒன்றிணைத்து ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவதில் பாடசாலை சட்ட திட்டங்கள் பங்கு கொள்கின்றன.

பாடசாலைகளில் நடைபெறும் இணைப்பாடவிதான செயற்பாடுகள், விழாக்கள், போட்டி நிகழ்வுகள் அனைத்தும் மாணவர்களின் மனநிலையில் வெற்றி, தோல்வியை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கண்டு தாமாக சமாளிக்கும் ஆற்றலை வலுப்படுத்துகின்றன. சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டி எழுப்புவதில் துணைநிற்கின்றன.

பாடசாலைகளே நாளைய தலைவர்களை உருவாக்குகின்றன. சாரணியர் இயக்கம், மாணவர் பாராளுமன்றம், மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் என பொறுப்புக்களை வழங்கும்போது தானாகவே நாளைய உலகிற்கு தலைவர்கள் உருவாக கூடிய சூழ்நிலையை பாடசாலை சட்டதிட்டங்கள் அமைத்துக் கொடுக்கின்றன.

இலங்கை பாடசாலைகளில் கலைத்திட்ட வடிவமைப்புக்கு ஏற்ப பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த கலைத்திட்டத்தில் நோக்கமாக நாளைய நவீன உலகிற்கு சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்பிஜைகளை உருவாக்குவதாகவே அமைகின்றது.

இந்த கலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்கள் அனைத்து விதத்திலும் சமூகநிலைப்படுத்துவதற்கு ஒவ்வொரு தேர்ச்சி மட்டங்களை கொண்டு பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் நடைபெறும் கலாசார நிகழ்வுகள் மாணவர்களை சமூக நிலைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக வாணி விழா, மீலாத் விழா, பொங்கல் விழா, ஆண்டு விழா போன்ற விழாக்களை நடத்துவதனால் பிற மதங்களின் சம்பிரதாயங்கள், நடைமுறைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக அமையும். இதனால் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியில் சென்றாலும் பிற சமூகங்களை ஏற்று ஒற்றுமையுடன் வாழ வழி ஏற்படுகின்றது.

பாடசாலைகளில் வருடம் தோறும் சுற்றுலா களப்பயணங்களை திட்டமிட்டு கொண்டு செல்கின்றபோது மாணவர்கள் பாடப் புத்தகங்களில் வாசித்து அறிந்த விடயங்களை நேரில் பார்வையிடும் பொழுது அவை மிகவும் பயனுள்ள விடயமாகவும் புதிய விடயங்களைக் கண்டு கொள்ளவும் வாய்ப்புக் கட்டுகின்றது. அதோடு பல்வேறு வகையான புதிய சமூகங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் சுற்றுலா களப்பயணங்களை திட்டமிட்டு கொண்டு செல்கின்ற செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இலங்கை பாடசாலை சட்டதிட்டங்களுக்கு அமைய தரம் 1 தொடக்கம் 13 வரையான வகுப்புகள் காணப்படுகின்றன. 6 தொடக்கம் 19 வயது வரையான காலப் பகுதியில் ஒருவர் வெளிச்சமூகம் விரும்புகின்ற அனைத்து திறன், மனப்பாங்கு என்பவற்றை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பதற்கு இணங்க சிறு வயதில் இருந்தே பாடசாலையும் பாடசாலை சட்டதிட்டங்களும் ஒருவரை சமூகமயமாக்கி சமூக தேவைக்கு ஏற்ப பல்வேறு வகையிலும் வளப்படுத்துகின்றது.

*மு. ரகுவரன்*
*நான்காம் வருட கல்வியியல்*
*சிறப்புக் கற்கை மாணவன் கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்கு பல்கலைகழகம்.*

இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்த

# கெடம்பே மேம்பால நிர்மாணப் பணிகள் ஹங்கேரி அரசின் உதவியுடன் ஆரம்பம்

## ஹங்கேரி பிரதிநிதிகளுடன் அமைச்சர் பந்துல கண்காணிப்பு விஜயம்





இலங்கையில் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்த கெடம்பே மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான கடனுதவி வழங்கும் ஹங்கேரிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன கண்காணிப்பு விஜயத்தில் இணைந்துகொண்டார்.

ஹங்கேரி பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததன் பின்னர், இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதையும் அவரிடம் தெரிவித்தார்.

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க, ஹங்கேரி அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மார்டன் லாஸ்லோ இலங்கை ஹங்கேரியின் கௌரவ சபை (CEO – Betonutepito),

புதுடெல்லியில் உள்ள ஹங்கேரிய தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக ஆலோசகர் லெவென்டே கார்டோஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார, திட்டங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நலிந்த ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் கெடம்பே ராஜோபவனாராம விகாரையில் இலங்கை ராமக்ஞ்ஞ மகா நிக்காயாவின் அனுநாயக்கர் வணக்கத்துக்குரிய கெப்பிட்டியாகொட சிறி விமல நாயக்கரை தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

### தமிழ் முற்போக்கு கூட்டணி...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிக்கையில், அண்மையில் கூடிய கட்சியின் அரசியல் உயர்பீட கூட்டத்தின் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

### யாழ். நல்லூர் கந்தன்...

10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

மஞ்சத்திருவிழா (18) அருணகிரிநாதர் உற்சவம் (25) கார்த்திகை உற்சவம் (26) சூர்யோற்சவம் (27) ந்தானகோபலர் உற்சவம் (28) காலையும் நடைபெறும். அதே தினம் (28) மாலையில் கைலாசவாகனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. ஜவல்லி மஹாவல்லி உற்சவம் (29) அன்றைய தினம் மாலை வேல்விமானம் (தங்கரதம்) உற்சவம், தண்டாயுதபாணி உற்சவம் (30) அன்றைய தினம் மாலை ஒருமுக உற்சவமும் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.மேலும், சப்பறத் திருவிழா (31) மாலையும் தேர்த்திருவிழா (01 தீர்த்தத்திருவிழா (02) பூங்காவனத் திருவிழா (03) மாலையும் நடைபெறும்.மறுநாள் (04) வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

### SLPPயை உடைக்கும் வகையில்...

ஜனாதிபதி எப்போதும் கூறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடல் (05) இரவு பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேக்கர, ரமேஷ் பத்திரன, அலி சப்ரி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மாவட்ட மட்டத்தில் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி எம்மை ஒதுக்கவோ அல்லது பிரிக்கவோ ஒருபோதும் முயற்சிக்கவில்லை. நான் மிகுந்த பொறுப்புடன் இதை,கூறுகிறேன்.

நாட்டு மக்களின் அபிப்பிராயத்தின்படி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குமாறு அவர்கள் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்தார்கள். கட்சியாக இணைந்து பணியாற்றுமாறு அவர் எப்போதும் கூறுவார். நடனம் ஆட முடியாதவர்களை பூமி இழுக்கும் என்பது போல், சாக்குப்போக்கு சொல்பவர்களின் கருத்தே ஒழிய இது எங்களின் கருத்து அல்ல.

### இஸ்ரேலில் பணியாற்றுவோருக்கு...

அங்குள்ள புலம்பெயர் தொழிலாளர் தொடர்பு கொள்வதற்கு வசதியாக இஸ்ரேலிய அதிகாரிகள் வழிகாட்டல்களையும் தொலைபேசி எண்களையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேலின் வெளிநாட்டு தொழிலாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

லெபனானிலிருந்து வடக்கு இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்ட 'சந்தேகத்திற்குரிய வான்வழி இலக்கை' இஸ்ரேலிய இராணுவத்தின் வான் பாதுகாப்புப் படைகள் இடைமறித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் நேற்று தெரிவித்தன.

லெபனான், ஈரான் ஆகிய நாடுகளின் தாக்குதல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கை, துருக்கி, ஜப்பான், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள்,இஸ்ரேலிலுள்ள தமது நாட்டு மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

### தமிழ் பொது வேட்பாளர்: ரெலோ...

பொது வேட்பாளரை ரெலோ கட்சி ஆதரிக்கிறது. ஆனால் இதற்கு நான், உடன்பாடில்லை. அது ஒரு விஷப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடே, எனது நிலைப்பாடும். பொது வேட்பாளருக்கு வன்னியில் ஆதரவு இல்லை.

பொதுவேட்பாளர் வெல்லப்போவதுமில்லை. சமஷ்டி உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னிறுத்தி பொது வேட்பாளரை நிறுத்துகிறார்கள். ஆனால், அவர் குறைந்த வாக்குகளை பெறுகின்ற போது மக்களது அபிலாசைகளுக்கு தமிழ் மக்களது அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும்.

தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்ற தமிழ் தேசிய கட்சிகளும் இந்த கூட்டணியுடன் இணைந்து, பொது வேட்பாளரை நிறுத்தினால் அதை, ஆதரிப்பேன் .தமிழரசுக் கட்சி பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. இதனால் தமிழ் வாக்குகள் சிதறும்.

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்காத தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சட்டத்தரணி கே.வி தவராசா மற்றும் அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் ஆகியோரில் ஒருவரது பெயரை பரிசீலிக்கிறார்கள்.

### மனிதனின் மூக்கினூடாக சென்று...

திருவனந்தபுரம் கன்னரவிளையைச் சேர்ந்த அகில் என்பவர் கடந்த 23ஆம் திகதி அமீபா மூளைக் காய்ச்சலினால் உயிரிழந்தார். இதையடுத்து அகிலுடன் சேர்ந்து நீராடச் சென்ற அவரது நண்பர்கள் நான்கு பேருக்கும் மூளைக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

### இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு...

நால்வரும் நியமிக்கப்படவுள்ளனர். இந்த ஆய்வுக்குழு விரைவில் கூடவுள்ளதாக தமிழக மீனவர் பிரதிநிதிகள் மத்தியில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் தமிழக மீனவர் பிரதிநிதிகள் திங்களன்று புதுடில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பான மனுவை வழங்கினர். இலங்கை கடற்பகுதியில் இலங்கை கடற்படை படகு மோதி உயிரிழந்த மீனவர் மற்றும் காணாமல் போன மற்றொரு மீனவர் குறித்தும், இராமநாதபுரத்தில் மீனவர்கள் போராட்டம் குறித்தும் பேசப்பட்டது. காணாமலான மீனவரை விரைந்து கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்றும் மீனவர் கோரிக்கை விடுத்தனர். இலங்கை சிறையிலிருக்கும் இந்திய மீனவர் அனைவரையும் விரைவாக மீட்டுத் தர வேண்டும். இந்திய,இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பை இந்திய அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்தனர். இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் சுமுகமாக தீர்வுகள் காணப்பட்டு அனைவரும் தமிழகத்துக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்படுவரென மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

### சகல கட்சிகளும் ஒன்றிணைந்து...

வேட்பாளராக களமிறங்கியுள்ளாரென, ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இதுபற்றி தொடர்ந்து தெரிவித்த அவர்:

நாட்டில் கடந்த வருடங்களில் இருந்து வந்த பொருளாதார நெருக்கடியால், இளைஞர் சமூகம் முழுமையாக வீழ்ச்சியடைந்தது. சில இளைஞர்கள் நாட்டை விட்டுச் சென்றனர். இந்நிலை தொடர்ந்து அவ்வாறு இருக்க முடியாது. நாங்கள் இந்த நாட்டை புதிய திசைக்கு கொண்டு செல்ல வேண்டும். இதற்கு இளைஞர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் தேவையாகும். நாடு வங்குரோத்தடைந்து இரண்டு வருட காலத்துக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்த 42 வருட அரசியல் அனுபவமே காரணமாகும். என்றாலும் இன்னும் அந்த பணி முடிவடையவில்லை. இது புரியாமல் அரசியல்வாதிகள் வழமையான போக்கில் பொய்ப் பிரச்சாரம் மேற்கொண்டு மீண்டும் நாட்டு மக்களை கஷ்டத்தில் வீழ்த்தினால், மிகப்பெரிய ஆபத்தான நிலையே ஏற்படும்.

அதிதீவிர சிகிச்சை பிரிவிலிருந்து சாதாரண வாட்டுக்கு கொண்டு வந்த நோயாளியை தற்போது வீட்டுக்கு கொண்டு செல்ல வேண்டி இருக்கிறது. என்றாலும் அரசியல்வாதிகள் தொடர்ந்து பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு, நோயாளியை மேலும் அழுத்தத்திற்கு உட்படுத்தினால், நோயாளியை மயானத்துக்கே அனுப்பவேண்டி வரும். அதனால் நாட்டு மக்கள் இதுதொடர்பாக மிகவும் அவதானமாக புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் இருக்கும் அரசியல் கட்சிகள் இந்த நாட்டை எந்த திசையை நோக்கி கொண்டு செல்கிறது என்பதை தொடர்பில் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

அரசியல் கட்சிகள் நினைத்த பிரகாரம் பொய் பிரசாரம் செய்வதை நிறுத்த வேண்டி இருக்கிறது. நாட்டினதும் பொது மக்களினதும் பாதுகாப்புக்காக அரசியல் கட்சிகள் மற்றும் அதன் உறுப்பினர்கள் சம்பிரதாய அரசியலில் இருந்து விடுபட்டு செயற்பட வேண்டும்.

### நிரந்தர வைப்புத் தொகைக்கு...

8.5 ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளது, இதன் காரணமாக சிரேஷ்ட பிஜைகளின் கணக்கு வைத்திருப்பவர்களில் பெரும்பாலானோர், தங்கள் வைப்புத் தொகையை திரும்பப் பெற்றுள்ளனர்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது:

கடந்த காலங்களில், பல்வேறு பிரஜைகள், முதியோர் மற்றும் பிற அமைப்புகள் சிரேஷ்ட பிரஜைகளின் கணக்குகளுக்கு கூடுதல் வட்டி விகிதத்தை கோரி வருகின்றன. இது ஒரு காலத்தில் அவர்கள் அனுபவித்த சலுகையாகும். இது நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கும் திட்டம்.

ஆனால் நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்ததால் இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் பின்னர் வட்டி வீதம் 30 வீதமாக அதிகரிக்கப்பட்டது.

நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்க வட்டி வீதம் உயர்ந்தது. அந்த நேரத்தில், அனைவரும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தனர். மற்ற கணக்குகளிலும் முதலீடு செய்துள்ளனர்

### ஷேக் ஹசீனாவுக்கு உதவி...

ஜெய்சங்கர் கூறியுள்ளார். பங்களாதேஷில் கலவர சூழல் நிலவுவதால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இந்தியாவில் ஷேக் ஹசீனா தஞ்சம் அடைந்திருக்கும் நிலையில், இது தொடர்பாக விவாதிக்க டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஜெய்சங்கர் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டது. "ஷேக் ஹசீனாவுக்கு உதவுவதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. ஹசீனா அதிர்ச்சியிலுள்ளார். அவரது எதிர்காலத் திட்டங்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஹசீனாவுடன் பேசுவதற்கு முன்னர், அவர் குணமடைய அவகாசம் அளிக்க விரும்புகிறோம். பங்களாதேஷிலுள்ள சிறுபான்மையினரின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் முதலானவை போராட்டக்காரர்களால் இலக்குவைக்கப்பட்டு தாக்கப்படுகின்றன. இது குறித்து கவலையடைகிறோம்" என்று விளக்கமளித்தார் ஜெய்சங்கர். பங்களாதேஷ் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் பல ஆண்டுகளாக நட்பு நாடாக உள்ளன. அங்கு வன்முறை வெடித்து நிலைமை மோசமானதால் ஹசீனாவின் விமானம் இந்தியா வர அனுமதித்தோம். எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், திடீரென ஹசீனா இந்தியா வந்தாரென்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை பங்களாதேஷ் பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை கலைக்கப்பட்டதாக பாராளுமன்ற அலுவலகம் அறிவித்துள்ளது. "இராணுவம் தலைமையிலான அரசை ஏற்க மாட்டோம்" என்று மாணவர் போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர், மேலும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முஹம்மது யூனுஸ் (வயது84) இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகராக பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளார்.

### இக்கட்டான நிலையில் எமக்கு உதவிய நாடு;...

முதலீட்டாளர்களில் ஒருவராக நாங்கள் இருப்பதால், அந்த நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம். இவ்வுலகில் நிலைமைகள் சரியில்லை என்பதை இந்நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் இந்த திட்டங்களிலிருந்து இலங்கை விலகும் என்று அர்த்தமில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று (06) முற்பகல் ஆரம்பமான 2024 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை (ESG) மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல்களைப் பயன்படுத்துதல், விவசாயத்தை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்ப்பற்றாக்குறைக்குத் தீர்வு வழங்குதல் போன்ற துரித முறைகள் மூலம் 2040 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைவதற்கும் இலங்கை செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதற்காக வர்த்தக முதலீடுகள் ஊடாக உலகளாவிய நிதி வசதிகளை ஈர்ப்பதுடன், பெருந்தோட்டத் துறையை பெருந்தோட்டத் தொழிலிலிருந்து விவசாய வணிகமாக மாற்றுவது, நிலையான சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு மற்றும் உற்பத்திகளை மேம்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன இதன் பிரதான வேலைத் திட்டங்களாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

'பிரகாசமான எதிர்காலத்துக்கான நிலையான பாதை' என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பு பல்கலைக்கழக வணிக நிர்வாக முதுகலை பட்டதாரிகளின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு நாள் முழுவதும் நடைபெற்றது.

சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஆகிய துறைகளில் சுமார் 15 நிபுணர்கள் தமது அறிவையும் புரிதலையும் புத்தாக்க தீர்வுகளையும் இதன்போது பகிர்ந்து கொண்டனர்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை (ESG) தொடர்பான விருதுகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டன.

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறு மாநாடுகளில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) தொடர்பில் கலந்துரையாடி வருவது தொடர்பில் முதலில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். உலகம் எவ்வாறு மாறுகிறது என்பது குறித்தும் பொருளாதாரம், சமூகம் மற்றும் நிர்வாகம் குறித்து தனியார் துறை ஆராய வேண்டும். மேலும் தெற்காசியாவில் உள்ள அனைத்து நாடுகளிடையே நமது நாடு சிறந்த நாடு என்றே கூற வேண்டும். மாலைதீவு நம்மைப் போன்ற நாடாகும். ஆனால் அது மிகச் சிறிய நாடு. ஏனைய நாடுகள் அதற்கு தயாராக இல்லை என்று நினைக்கிறேன். எனவே நாம் இதில் முதன்மையானவராக இருக்க வேண்டும்.

## இன்றைய பலன்கள் (07.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம் :** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம் :** ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம் :** வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம் :** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி :** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம் :** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம் :** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு :** வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம் :** விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம் :** பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம் :** தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

### அலங்கார மீன்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கான அனைத்து சலுகைகள் ஊக்குவிப்புகளும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு 548.8 மெற்றிக்தொன் அலங்கார மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் 2908 .3 மில்லியன் ரூபா வருமானமாக பெறப்பட் டுள்ளது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டில் 2408.7 மில்லியன் ரூபா, 2021 ஆம் ஆண்டில் 4183.6 .மில்லியன் ரூபா ,

2022 ஆம் ஆண்டில் 7135 .5மில்லியன் ரூபா, 2023 ஆம் ஆண்டில் 8631.1 மில்லியன் ரூபா மற்றும் இந்த ஆண்டின் கடந்த ஆறு மாதங்களில் 3236. 2 மில்லியன் ரூபாவும் வருமானமாக பெறப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### பாடசாலைகளின் ... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், பாடசாலை கல்வி சாரா ஊழியர்களை உதவியாளர் சேவையாக பெயரிட்டுள்ளதுடன் பாடசாலைக் கல்வி சாரா ஊழியர்களுக்கான தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நாமல் ராஜபக்ஷ எம்பி... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நாமல் ராஜபக்ஷ பதவி வகித்து வந்தார். அவர் விலகியுள்ளதால் அந்தக் குழுவுக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

### ஊடகவியலாளர்கள், சமூக... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரிப்பது, எவ்வாறான நிபந்தனைகளை முன்வைப்பது, வெற்றிவாய்ப்புக்குச் சாத்தியமான வேட்பாளர் யார்? என்பவை உள்ளிட்ட கருத்துக்கள் கலந்துகொண்டோரிடமிருந்து பெறப்பட்டன.பிராந்திய அரசியல் நலன்கள், சமூக நலன்களை முன்னிறுத்தி பலரும் பல கருத்துக்களை முன்வைத்தனர். கலந்துகொண்டோரின் தனிப்பட்ட கருத்துக்களை உள்வாங்கிய கட்சியின் உயர்பீடம் காத்திரமானதும், சமூகத்துக்கு பாதுகாப்பானதுமான முடிவை விரைவில் அறிவிப்பதாகத் தெரிவித்தது. அபிவிருத்தி அரசியல் மற்றும் உரிமை அரசியல் என்பவற்றை சமகாலத்தில் முதன்மைப்படுத்தி, அரசியலை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக கட்சியின் தவிசாளர் அமீர்அலி தெரிவித்தார். கடந்தகால படிப்பினைகளின்

அடிப்படையில், கட்சியின் முடிவு அமையுமென கட்சியின் தலைவரான ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

### SLFP அலுவலகம்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதவுகளுக்கு சாவியை பயன்படுத முற்பட்டதாக மனுதாரர் நிமால் சிறிபால டி சில்வா மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் தனிப்பட்ட முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

### 83,000 அரச சேவை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊதியத்தின் அடிப்படையில் திருத்தியமைத்து அதிகபட்சமாக 2,500 ரூபா உயர்வைப் பெறும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சமர்ப்பித்த ஆலோசனைக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனதெரிவித்தார்.அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (06) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.வாக அதிகரிப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

### உணர்வுகளுக்கு அடிபணியாது...

ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார். இதற்கு முன்பிருந்த பழைய நிலைக்கு வராவிட்டாலும் அதை விட நல்லதொரு நிலைக்கு வர முடியும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். உணர்வுகளுக்கு அடிபணியாமல் சிந்தித்து செயற்பட வேண்டும். அதனையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### கடற்பரப்புக்குள் அத்துமீறிய...

தென் கடற்பரப்பில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையிலேயே, இவர்கள் கைதாகினர். இதன்போது இவர்களது படகுகளும் கைப்பற்றப்பட்டன.

### திறைசேரி செயலாளருடன்...

பெருந்தோட்ட சமூகத்தினரை உள்வாங்கக் கூடிய ஏனைய நலன்புரி நலன்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




## மலையக நட்சத்திரக் கலைப் பேரவை நடத்திய மக்கள் விழிப்புணர்வு வேலைத்திட்டம்





(புசல்லாவை தினகரன் நிருபர் )

புசல்லாவை சோகம தோட்ட மத்திய பிரிவு மற்றும் நிவ் மெல்போட் தோட்டங்களில் மக்கள் விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்று நேற்று முன்தினம்(05) நடத்தப்பட்டிருந்தது.

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் கீழ், மலையக நட்சத்திரக் கலைப் பேரவை இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில், பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன், செயலாளர் மருதமுத்து நவநீதன் சீ.றஷ்மிகா, பொருளாளர் முப்புளி மகேஸ்வரன் பெண்கள் அணி பொறுப்பாளர் எஸ்.ஸ்ரீப்பிரியா ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியமும் , கலாச்சார மற்றும் சுற்றாடல் அமைப்பும் இணைந்து நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கண்டி YMBA மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டி மாவட்ட சமூக சேவைக்கு பொறுப்பான சம்பத் எதிரிசிங்க மற்றும் நிகழ்வின் ஏற்பாட்டளர் வி .கோவிந்தராஜ் ஆகியோர் கலந்துக்கொண்டிருந்தமையை படத்தில் காணலாம். (தீபன்)

# மலையக மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த இந்தியாவில் இருந்து 19 ஆசிரியர்கள் வருகை

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்







மலையக மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு விஞ்ஞானத்துறை மற்றும் ஏனைய துறைகளில் மாணவர்களை வலுப்படுத்தும் நோக்கில், "வித்யாவர்தன VIDHYAWARDANA" ஆசிரியர்களுக்கான திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (05) அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது, இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஒழுங்குப்படுத்தலுடன் நேற்று முன்தினம் (05) அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலிருந்து சுமார் 2000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.

அத்துடன், இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் H.E. கலாநிதி சத்தியஞ்சால் பாண்டே, தேசிய கல்வி நிறுவன பொது பணிப்பாளர் பேராசிரியர் பிரசாத் சேதுங்கல், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, கல்வி அமைச்சின் செயலாளர், அமைச்சு அதிகாரிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனாதிபதி தேர்தல் காலங்களில் அமைச்சர்கள் பங்கு கொள்ளும் நிகழ்வுகளுக்கு தேர்தல்கள் ஆனைக்குழு தடை விதித்துள்ளமையினால், அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்நிகழ்வில் பங்கேற்கவில்லை.

எனினும், இந்நிகழ்வு தொடர்பான ஊடக சந்திப்பொன்றை, கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் ஏற்பாடு செய்து கருத்து தெரிவித்த, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

மலையக பாடசாலை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் இந்தியாவில் இருந்து 19 ஆசிரியர்கள் வருகை தந்துள்ளனர். இவர்களினூடாக மலையக பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய பாடங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

அத்துடன், முதற் தடவையாக ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் இடம் பெறுகின்றன. அதனைத்தொடர்ந்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் தொடர்ந்து மூன்று மாத காலம் பயிற்சிகள் இடம்பெறும்.

மேலும், மலையக பாடசாலை மாணவர்கள் 30 சதவீத கல்வியே பெறுகின்றனர். மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் டொக்டர் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடினோம்.

இதேவேளை, எமது நாட்டின் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த மற்றும் எனது அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

## இரத்தினதீபம் அமைப்பின் விருது விழா கலைஞர்கள் பலர் கௌரவிப்பு





மலையக கலை கலாசார சங்கமான இரத்தினதீபம் அமைப்பானது, கண்டி செல்லத்துரை நினைவு மண்டபத்தில் அண்மையில் விருது விழாவொன்றை நடத்தியிருந்தது.

இந்த விருது விழாவில் பல்வேறு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், மறைந்த நடிகர் விஜயகுமாரனதுங்க மற்றும் மொஹிடீன் பேக் ஆகியோர்களது நினைவேந்தல் வைபவமும் இடம் பெற்றது.

இந் நிகழ்வில், பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறைத் தலைவர் பேரசிரியர் துரை மனோகரன் கலந்துகொண்டிருந்தார்.

விசேட அதிதிகளாக சிங்கள சினிமா படத் தயாரிப்பாளர் பத்மசிரி கொடிகார, சட்டத்தரணி கலாநிதி ஏ.எம். வைஸ், வர்த்தகர் பஸன் சந்திரசேகர மற்றும் இரத்தின தீபம் அமைப்பின் தலைவர் தேசமான்ய எஸ். பரமேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## விஜயதாச ராஜபக்ஷவின் வெற்றிக்கு கண்டி வாழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்



தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் வெற்றிக்கு கண்டி வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என, ஶ்ரீ லங்கா சுகந்திரக் கட்சி கண்டி மாவட்ட தமிழ் அமைப்பளர் தேசகீர்த்தி முருகேசு தீபன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை குறிப்பிட்ட அவர், இம்முறை ஜனாதிபதி தேர்தல் நம் மக்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். கண்டி மாகியாவ கிராமத்தின் வீட்டுஉரிமை எந்த அரசங்கமும் பெற்றுக் கொடுக்கவில்லை. 1827 ஆம் ஆண்டு தொடக்கம் நாம் இந்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். எமக்கான வீட்டு உரிமை எந்த அரசங்கத்திலும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

கடந்த மாதங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல நகரங்களுக்கு வீட்டு உரிமையை பெற்றுக் கொடுத்தார். ஏன் அவர்களின் கண்ணுக்கு எம்மை தெரியவில்லையா? சற்று சிந்தியுங்கள். நமக்கான பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண்போம்.

ஆகவே, இம்முறை ஜனாதிபதி வேட்பாளரான விஜேயதாச ராஜபக்ஷ அவர்களை ஆதாரிக்க வேண்டும்.

இம் முறை எமது முக்கிய பிரச்சினையாக இருக்கக்கூடிய, வீட்டு உரிமையையும், எமக்கு கிடைக்க வேண்டிய பல சலுகைகளையும் பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 150ஆவது நான்காம் நிலை மர பதக்க உயர்தர பாடநெறி நாளை நிறைவு



150ஆவது நான்காம் நிலை மர பதக்க உயர்தர பாடநெறி கடந்த 02 ஆம் திகதி முதல் நாளை 08ஆம் திகதி வரை நுவரெலியா பீட்ரு சாரணர் முகாமில் நடைபெறவுள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோவின் வழிகாட்டலின் கீழ், தேசிய பயிற்சி ஆணையாளர் கர்னல் பத்மலால் பெரேராவின் வழிகாட்டலின் கீழ் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திறன் குறைந்த 47 ஆசிரியர்களுக்கான பயிற்சிக்காக இந்தப் பாடநெறி நடைபெறவுள்ளது.

இலங்கையில் முதல் முறையாக மர பதக்கத்தை வென்றவர் டி.கே. இர்வின் அருட்தந்தையும் மற்றும் ஏ.விஜேசிங்வும் ஆவார்கள். அதன் பின்னர் நுவரெலியாவிலுள்ள பீட்ரு சாரணர் முகாமிலும் மீரிகமவில் உள்ள லீ தசநாயக்க சாரணர் முகாமிலும் மரப்பதக்கப் பாடநெறிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

அதன்படி, 100 ஆவது சாரணர் மர பதக்க பயிற்சி நெறி நுவரெலியா பீட்ரு முகாமில் நடைபெற்றதோடு மேலும் 150 ஆவது மர பதக்க உயர் பாடநெறி கடந்த 02 ஆம் திகதி ஆரம்பமானதுடன் நாளை 08 ஆம் திகதி வரை அதே முகாமில் நடைபெறும்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத்தையாவது வழங்க அரசு முன்வரவேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சம்பள விடயத்தில் ஏமாற்றப்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத்தையாவது பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று(06) நடைபெற்ற மாத்தறை நில்வலா கங்கையை அண்மித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர் நீர் தடுப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

'மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதுவரை தீர்வுகள் இன்றி உள்ளனர். பூனாகலை, பசறை, மடுல்சீமை உள்ளிட்ட பல இடங்களில் மண்சரிவால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் உத்தரவிட்டும் அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கிலேயே செயற்படுகின்றனர்.

அதேவேளை, சம்பள விடயத்தில் இலவு காத்த கிளி போல மக்கள் காத்திருக்கின்றனர். இந் நிலையில் மீண்டும் சம்பள நிர்ணய சபையின் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

நாட்டின் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றாற்போன்று உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை வழங்க வேண்டும். பல அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட எமது சமூகத்திற்கு இடைக்கால நிவாரணத்தையாவது வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு மலையக மக்கள் சார்பில் நான் ஆதரவு வழங்கியுள்ளேன். அவ்வாறு வாக்களித்து நான் பதுளை மாவட்டத்தில் பல கோடி ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுகின்றேன். அத்துடன் நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## மண்சரிவு அபாயமுள்ள 35 இடங்கள் அடையாளம்

நாட்டில் மண்சரிவு அபாயமுள்ள 35 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.அதன்படி, நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாயமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த 35 இடங்களிலும் மண்சரிவு அனர்த்தங்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மாவா போதைப் பொருள் விற்பனை

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை பிரதேசத்தில், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மாவா போதைப்பொருள் விற்பனையில் ஈடுப்பட்டு வந்த இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாத்தளை, கொங்காவல பகுதியில் கடையொன்றில் மாவா போதைப் பொருள் விற்பனை செய்து வந்த இரு சந்தேக நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மாவா போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக, மாத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, குறித்த கடையை முற்றுகையிட்ட பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, குறித்த கடையிலிருந்து பெருந்தொகையான மாவா போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.08.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5556 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,003,664.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 3 8 2 5 3 2

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 131
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 2 5 3 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3798 — சீட்டிழுப்பு திகதி 2024.08.05 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,025,715.12
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 10 14 49 77 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 00835

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1904 — 2024.08.05 — 36540 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 441,041,934.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 06 — வெற்றி இலக்கங்கள் 08 18 33 39
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 382
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 8 4 4 9 0 7
L7 எழுத்து Y
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,832,633.28

ராசி சுப பலன் — திகதி 2024.08.05 — சீட்டிழுப்பு இலக்கம் 865 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,361,294.00
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 04 38 42 59 — தனயோக இலக்கம் 79818 — நாளுக்கான விதி எண் 16

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1586 — 2024.08.05 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,899,028.32
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 04 55 68 82 — விசேட எழுத்து E — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 77161

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக ஆறு முறைப்பாடுகள் பதிவு

### தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகம் தகவல்

**(கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)**




ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை தொடர்பில் இதுவரை 6 முறைப்பாடுகள் தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

அரச உத்தியோகத்தர்களது இடமாற்றம் தொடர்பாக நான்கு முறைப்பாடுகளும், தேர்தல் ஊர்வலம் தொடர்பாக ஒரு முறைப்பாடும், காணி பகிர்ந்தளித்தல் தொடர்பாக மற்றுமொரு முறைப்பாடும் பதிவாகியுள்ளன.

இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதி மீறல் குற்றத்தின் அடிப்படையில் சாதாரண தரமுடையவை எனவும், இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

## இலங்கை வங்கி தன்னியக்க பண இயந்திரம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொது மக்கள் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை வங்கியின் தன்னியக்க பண இயந்திரம் கிண்ணியா பிரதேச செயலாளரின் தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் கே.சி.மகவத்த, கிழக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் எச்.எம்.ஜீ.ஆர். விஜயவர்த்தன, கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் என்.ரீ. ரகுரா, கிழக்கு மாகாண கணக்காளர் ஜே.மோகனகிறிசாந் ஆகியோருடன் கிண்ணியா பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கிண்ணியா நகர சபையின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## கிண்ணியா நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு



**(கிண்ணியா மத்திய நிருபர்)**

கிண்ணியா நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா கல்லூரி முன்றலில், அதிபர் அல் ஹாபிழ் அஸ்செய்ஹ் எஸ். எம். முனீர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ஹாபிழ் சான்றிதழை 7 மாணவர்களும், அல் ஆலிம் சான்றிதழை 7 மாணவர்களும், ஹதீஸ் உயர் கற்கை பட்டத்தை 15 மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக காத்தான்குடி ஜாமியத்துல் பலாஜ் அரபுக் கல்லூரியின் அதிபர் அஸ் செய்ஹ் ஏ.ஜி.எம். அமீன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக பாணந்துறை ஜீனிய அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர், கொழும்பு அர்சாத் அரபுக் கல்லூரியின் பிரதி அதிபர் ஜே.எம். நிசாமுத்தீன், கொழும்பு ஹய்அதுல் குர்ஆனில் கரீம் கல்லூரி அதிபர் முப்தி முஹம்மது சௌமி கரீம் என பலரும்கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவரும், கிண்ணியா பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான

ஏ. எல். ஏ. அதாவுல்லா, முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹரூப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**



வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா இன்று (7) புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலய குரு சிவ ஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவித்தார். இதேவேளை நாளை (8) வியாழக்கிழமை நாக சதுர்த்தி விசேட பூஜையும் அங்கு நடைபெறவுள்ளது.

அத்தருணம் கொக்கு மந்தாரை, நீல காக்கணம்பூ, பால் போன்ற நைவேத்தியங்களை கொண்டு வருமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய கல்லூரியில் சின்னம் சூட்டும் நிகழ்வு



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

மட்டக்களப்பு, கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய கல்லூரி சாரண மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி சுவாமி நடராஜன் ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் சாரண பொறுப்பாசிரியர் ரீ. ருத்திராகரன் சாரண மாணவர்களுக்கான சின்னங்களை சூட்டி வைத்தார். இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், உதவி அதிபர், மாவட்ட உதவி சாரண ஆணையாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கல்லூரியின் பிரதி அதிபராக, சாரண பொறுப்பாசிரியராக கடமையாற்றி செங்கலடி மத்திய கல்லூரிக்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற கே. சுவர்ணேஸ்வரன் கல்லூரியின் சாரண மாணவர்களால் கௌரவிக்கப்பட்டார்.



பட்டிருப்பு வலயக்கல்வி வலயத்துக்குட்பட்ட மட்/பட்/காந்திபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் நிதிஒதுக்கீட்டின் கீழ் பாடசாலைக்கான போட்டோப்பிரதி இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் சா. சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வி.மதிமேனன், வலயக்கல்வி அலுவலக கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர் சோ.பத்மராஜா என பலரும் கலந்துகொண்டனர்.

(படம்: மணல்சேனை நிருபர்)

## பெரியநீலாவணையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா

**(பாண்டிருப்பு தினகரன், காரைதீவு குறூப் நிருபர்)**



இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயமும் இணைந்து நடாத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.குணராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காரைதீவில் நடைபெற்ற துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வை தொடர்ந்து நடைபெறும் முதலாவது நிகழ்வு இதுவாகும்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், பிரதி அதிபர் எஸ்.கோகுலராஜ் திருமதி புண்ணிய மலர், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீபிரியா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் படங்களை சமயப்பற்றாளர் மகேந்திரன் வழங்கி வைத்தார். இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டிருந்தார்.

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம்

**(வாச்சிக்குடா விஷேட நிருபர்)**



அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு நகரை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆசிரியரான சாமித்தம்பி புண்ணியமூர்த்தி மொழிபெயர்ப்பாளராக (ஆங்கிலம் - தமிழ்) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

2023 ஆம் வருடம் டிசம்பர் மாதம் நீதி அமைச்சினால் நடாத்தப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளராக (ஆங்கிலம் - தமிழ்) மட்டக்களப்பு மாவட்ட நீதவான் ஜனாப். எச்.எம். முகம்மட் பஷீல் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

### இலங்கையை சுற்றி நடைபயணம் வரும்

## பேருவளை இளைஞனுக்கு கிழக்கில் மகத்தான வரவேற்பு

**அட்டாளைச் சேனை மத்திய நிருபர்**



இலங்கையை சுற்றி நடைபயணம் வரும் பேருவளை இளைஞன் சஹ்மி ஷஹீத்துக்கு கிழக்கு மாகாணத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

பேருவளையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்த இளைஞன் சஹ்மி ஷஹீத் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தை வந்தடைந்தார். அவருக்கு அங்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவருக்கு மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

இளைஞன் சஹ்மி ஷஹீத்தின் பயணத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்கள். பொதுமக்கள் ஆகியோர் இன, மத, மொழி, பிரதேச, அரசியல் வேறுபாடுகளின்றி வரவேற்றனர். அதிகமானவர்கள் அவருடன் சிறிது தூரம் கால்நடையாகப் பயணித்து உற்சாகப்படுத்தினர்.

## சவளக்கடை வீதி அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் நற்பிட்டிமுனை சவளக்கடை பிரதேசங்களில் வீதி அகலமாக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்விரு வீதிகளும் கல்முனை பிரதேச செயலகம், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் அடங்குகின்றன.

கல்முனை, அம்பாறை, கல்முனை, சம்மாந்துறை, கல்முனை சென்ரல்கேம்ப், கல்முனை, மண்டூர் ஆகிய பிரதேசங்களுக்கும் இவ்வீதி வழியே பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஓர் வாகனம் மாத்திரமே பயணம் செய்யக் கூடியதாகவும் முன்னால் வரும் வாகனத்தை திருப்பக் கூடிய வசதிகளின்றி காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை அகலமாக்கி தருமாறு பல்வேறு அமைப்புகள் உரிய திணைக்களத்தலைவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.



## மாணவர் சந்தை நிகழ்ச்சி

கலைத்திட்டத்துக்கமைய செயற்படுத்தப்பட்டு வரும் மாணவர் சந்தை நிகழ்ச்சி அட்டாளச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் நேற்று நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ. ஜௌபரின் நெறிப்படுத்தலின் கீழ் அதிபர் ஏ.சீ. நியாஸ் தலைமையில் தரம் மூன்று மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான எம்.ரீ.எம். சியாத், ஏ.கே. அனீஸ், எம்.ஏ. சுஹைறா, ஏ.ஜே. றினீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

தரம் மூன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு மாணவர் சந்தையில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பார்வையிட்டனர்.

## சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய 30 பேர் கைது

**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் ஐஸ் போதைப் பொருள் விற்பனை மற்றும் கசிப்பு, திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட 30 பேர் கடந்த ஒரு வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட காத்தான்குடி ஒல்லிக் குளம், புதிய காத்தான்குடி உட்பட பல இடங்களிலிருந்து ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவைதவிர கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற்பனை, மற்றும் வீடு உடைத்தல், திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 24 பேர் அடங்கலாக 30 பேர் கடந்த ஒரு வார காலத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஐஸ் போதைப்பொருள் விற்பனையாளர்களுள் 2 கிராமுக்கு அதிகமான போதைப்பொருளை வைத்திருந்த ஒருவரும் அடங்குவர்.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நகர்வலம்



## புனித ஸபர் மாதம் ஆரம்பம்

கொழும்பு தினகரன் நிருபர்

ஹிஜ்ரி 1446 ஸபர் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று முன்தினம் (05) திங்கட்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது எப்பாகத்திலும் தலைப்பிறை தென்படாததால் இலங்கை வாழ் மக்கள் புனித முஹர்ரம் மாதத்தை செவ்வாய்க்கிழமை 06 ஆம் திகதி 30ஆக பூர்த்தி செய்து மஃரிப் தொழுகையுடன் புனித ஸபர் மாதம் ஆரம்பமாகின்றது என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுவின் பிரதித் தலைவர் மௌலவி ஏ.எல்.எம். றிழா அல் மஹ்தூமி உத்தியோகபூர்வமாக அறிவித்தார். கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் என்.ரி.எம். லரீப் உள்ளிட்ட பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலா அஹமட் உள்ளிட்ட அதிகாரிகள், வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி மொகமட் சாலிகீன், ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள் ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழரசு கட்சிக்குள் இரு நிலைப்பாடு

## பொதுவேட்பாளர் அறிவிப்பு இழுபறி நிலையால் தாமதம்

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பு பொது வேட்பாளரை அறிவிப்பதற்கு தமிழரசு கட்சியின் சம்மதம் கிடைக்காததால், பொது வேட்பாளரை அறிவிப்பது பிற்போடப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் தரப்பு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக தமிழ் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்குமிடையிலான நீண்ட கலந்துரையாடல் சில மாதங்களாக நடைபெற்று வந்தது.

கடந்த மாதம் ஏழு தமிழ் கட்சிகளும் ஆறு சிவில் அமைப்புகளும் இணைந்து தமிழ் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, பொது வேட்பாளர் தொடர்பான தெரிவை முன்னெடுப்பதற்கான உப குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்நிலையில், தமிழ் பொது வேட்பாளராக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் கிழக்கு மாகாண தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் ஆகியோரின் பெயர்கள் இறுதி முடிவுக்காக பரிசீலனையில் எடுக்கப்பட்டிருந்தது.

இருவரும் தமிழரசு கட்சியை சேர்ந்தவர்கள் என்பதால், தமிழரசு கட்சிக்குள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சார்பு அணி பொது வேட்பாளருக்கு ஆதரவாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆதரவு அணி பொது வேட்பாளருக்கு எதிராகவும் உள்ளன.

இதனால் தமிழரசுக் கட்சியின் சம்மதம் கிடைக்காமல் உள்ளது. இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் ஆதரவு இல்லாமல் இருவருடைய பெயர்களில் ஒருவரை தெரிவு செய்வதில் சிக்கல் காணப்படுவதாலேயே, பொது வேட்பாளர் அறிவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அ.இ.ம. காங்கிரஸின் குருநாகல் மாவட்ட புத்திஜீவிகளுடனான விசேட சந்திப்பு



குருநாகல் மாவட்ட புத்திஜீவிகளுடனான சந்திப்பு திங்கட் கிழமை (05) சியம்பலாகஸ்கொடுவயில் கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான முஸம்மிலின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கட்சியின் தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அமீர் அலி, கட்சியின் உயர் பீட உறுப்பினர்களான இர்பான், அஷார்டீன், அன்பாஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அஷாட், இணைப்பாளர் டில்ஷாட் அலவி, முன்னாள் அமைச்சின் மேலதிக செயலாளர் ரியால்டீன், குருநாகல் மாவட்ட உலமா சபைத் தலைவர் சுஐப் மௌலவி உள்ளிட்டோருடன் கல்வியியலாளர்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கட்சித் தலைவர் ரிஷாட் பதியுதீன் விசேட உரையொன்றையும் நிகழ்த்தினார்.



## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினால் "யவ்ம் இ இஸ்தெஹ்சால்" தினம் அனுஷ்டிப்பு

ஜம்மு மற்றும் காஷ்மீரில் 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி இந்தியா மேற்கொண்ட சட்டவிரோத மற்றும் ஒருதலைப் பட்ச நடவடிக்கைகளை நினைவூட்டும் வகையில் "யவ்ம் இ இஸ்தெஹ்சால்" தினம் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் நேற்று முன்தினம் (05) அனுஷ்டிக்கப்பட்டது.

முக்கிய பேச்சாளர்கள் காஷ்மீரிகளின் அவலநிலையை சுட்டிக்காட்டியதோடு இந்த சர்ச்சையானது ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் நிகழ்ச்சி நிரலிலுள்ள பழமையான விஷயங்களில் ஒன்று என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

துரதிர்ஷ்டவசமாக, இந்தியா தனது உறுதிமொழிகளை மதிக்க மறுப்பதாலும், அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களை மதிக்காததாலும் இந்த சர்ச்சை இன்னும் தீர்க்கப்படாமலுள்ளது.

மனிதாபிமானமற்ற இராணுவ முற்றுகை, தகவல் தொடர்பு முற்றுகை, சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள், போலி என்கவுன்டர்கள் மூலம் அப்பாவி காஷ்மீரிகள் மீதான அடக்குமுறை மற்றும் மிருகத்தனமான தாக்குதலை உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) ஃபஹீம் உல் அஸீஸ் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.






## ஜனாதிபதி தேர்தலில்; தென் மாகாணத்தில் 21,10,278 பேர் இம்முறை வாக்களிக்க தகுதி

(வெலிகம தினகரன் நிருபர்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் நாடு பூராகவும் வாக்களிக்க இம்முறை ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 (1,71, 40, 354) பேர் வாக்காளர்களாக தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் தென் மாகாணத்தில் மொத்தமாக 21,10,278 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதோடு, இதன் பிரகாரம் காலி மாவட்டத்தில் 9,03163 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 6,86 175 பேரும் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 5,20 940 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் காலி மாவட்டத்திலேயே கூடுதலான வாக்காளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்பார்வையற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கு அமைச்சரினால் மூக்குக்கண்ணாடி வழங்கல்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சருமான அநுப பஸ்குவலின் ஏற்பாட்டில் புளத்சிங்கள பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கண்பார்வை குறைந்த சிரேஷ்ட பிரஜைகளுக்கான மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் புளத்சிங்களவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் தெரிவுசெய்யப்பட்ட கண்பார்வை குறைந்த சிரேஷ்ட பிரஜைகளுக்கு கண்ணாடிகளை வழங்கி வைத்தார்.

அங்கவீனர்களுக்கான செயலகத்தினால் மேற்படி மூக்குக் கண்ணாடி வழங்கும் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்களும் சிரேஷ்ட பிரஜை அமைப்பு பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இலங்கையை கால்நடையாக சுற்றிவரும் பேருவளை சஹ்மி சஹீதுக்கு முனவ்வர், ஹஸன் பாஸி வாழ்த்து

(பேருவளை விசேட நிருபர்)



இலங்கை நாட்டை 50 நாட்களுக்குள் கரையோரமாக கால்நடையாக சுற்றி வந்து சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பேருவளையைச் சேர்ந்த இளம் வாலிபன் சஹ்மி சஹீதுக்கு பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் முனவ்வர் றபாய்தீன் மற்றும் பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**ஹஸன் பாஸி தனது செய்தியில்**, இளைஞன் சஹ்மி, இள வயதிலேயே பலகட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஓர் துடிப்புள்ள வாலிபன். அவரது இந்த பெரும் சாதனை முயற்சியை எண்ணி ஒரே ஊர் என்ற வகையில் நாம் பெருமிதமடைகிறோம். அவரது இம்முயற்சி வெற்றிகரமாக கைகூட வேண்டும் என்று இறைவனைப் பிராத்தித்துக் கொள்வதாகவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். **பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் முனவ்வர் றபாய்தீன்** தனது வாழ்த்துச் செய்தியில், இலங்கை நாட்டை கால்நடையாக சுற்றிவர கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி பேருவளையில் தன் பயணத்தை ஆரம்பித்த சஹ்மி, தொடர்ந்து கால்நடையாக பல ஊர்களை தாண்டி நேற்றைய தினம் வடமாகாணத்தின் முல்லைத் தீவை சென்றடைந்துள்ளதை கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

அவர் தனது இலட்சிய கனவை நல்லமுறையில் நிறைவேற்ற இறைவனிடம் தான் பிரார்த்திப்பதாகவும் முனவ்வர் றபாய்தீன் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.





## முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடம் பலஸ்தீன தூதுவர் பிரியாவிடை



இலங்கையில் மிக நீண்ட காலமாக பலஸ்தீன தூதுவராக கடமையாற்றிய பின்னர், இஸ்லாமாபாத்திற்கு இராஜதந்திரியாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் கலாநிதி சுஹைர் எம்.எச்.செய்த் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் பிரியாவிடை நிமித்தம் திங்கள் கிழமை (5) சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது, பலஸ்தீனம் சுதந்திரமான இறைமையுள்ள நாடாக மிளிர்வதற்கும், அங்கு வாழும் மக்கள் இனப்படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் மூன்று தசாப்த காலமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் ஓயாது குரல் எழுப்பி வருவதற்காக பலஸ்தீன மக்களின் சார்பில் நன்றிகளை அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடம் தெரிவித்துக் கொண்டார்.

பலஸ்தீனம் ஒரு சுதந்திரமான இறைமையுள்ள நாடாக விளங்க வேண்டும் என்பது தமது வாழ்நாள் ஆசை என்பதாக அவரிடம் தலைவர் ஹக்கீம் கூறினார். பிராந்திய நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானுக்கு தூதுவராகச் செல்லும் கலாநிதி சுஹைர் எம்.எச் செய்த்தை தாம் மனப்பூர்வமாக வாழ்த்துவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.

## வாகன விபத்தில் ஒருபர் படுகாயம்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

மரதண்கடவல சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹபரணை பகுதியில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் தம்புள்ளை பகுதியில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த கார் ஒன்றும் மோதியே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் காரில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## காலணிகள் விநியோகம்



பேருவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பேருவளை/வலதர வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட வசதிகுறைந்த மாணவர்களுக்கு ஜேர்மனியைச் சேர்ந்த பரோபகாரியான Dr. Anette Heinz (City of Frankfurt) இன் சுமார் 1,25,000 நிதியுதவியில் பாடசாலை காலணி (Shoes) பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை பேருவளை இணைப்பாளர் இர்ஸான் மொஹம்மதின் சார்பில் மொஹமட் ரிழா பாடசாலை அதிபரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# 6 பில்லியன் ரூபா மதிப்புள்ள பங்குகளை மீண்டும் வாங்கிய Softlogic Life நிறுவனம்



இலங்கையில் இரண்டாவது மிகப் பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life, பங்குதாரர் ஒப்புதலுக்காக காத்திருக்கும் நிலையில் 6 பில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை மீளப் பெறுவதாக அறிவித்துள்ளது. தற்போது வெளியீட்டில் உள்ள 375,000,000 பங்குகளில் 58,593,750 பங்குகளுக்கு மீள்கொள்முதல் விலை ஒரு பங்கிற்கு ரூ. 102.40 ஆகும். தனது வலுவான நிதி செயல்திறன் மற்றும் சாதகமான குறைந்த வட்டி விகித சூழலைப் பயன்படுத்தி மூல தனத்தை சிறப்பாகச் சீரமைத்து பங்கு தாரர் மதிப்பை உயர்த்துவதே Softlogic Life நிறுவனத்தின் நோக்கமாகும். கடந்த தசாப்தத்தில், Softlogic Life நிறுவனம் மொத்த காப்புறுதித் தவணைகளில் 26% சதவீத வருடாந்த வளர்ச்சியைக் (CAGR) அடைந்துள்ளது, இது தொழில்துறை சராசரி 14% ஐ விட அதிகமாகும். அத்துடன், கடந்த ஐந்து ஆண்டுகளில், இது தொடர்ந்து 20% க்கும் அதிகமான பங்கு வருமானத்தை தொடர்ச்சியாகப் பேணியுள்ளதுடன், ஒழுங்குமுறை தேவை 120% சதவீத்தை விட அதிகமாக 367% என்ற மூலதனப் போதுமான விகிதத்தைப் (Capital Adequacy Ratio) பெற்றுள்ளது. நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட விநியோக முறைமையானது, அதன் மொத்த விற்பனை முறையில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, அதன் முகவர் விநியோகத்தில் 50% க்கும் அதிகமான இணைப்பு விகிதத்தையும் (Rider Attachment Ratio) கொண்டுள்ளது, இது ஆசிய பிராந்தியத்தின் சராசரியை விட 5 மடங்கு அதிகமாகும். 83% முதல் ஆண்டு தக்கவைப்பு விகிதம் மற்றும் சராசரி கொள்கை மதிப்பு ரூ. 176,872, ஆக உள்ளதால் Softlogic Life இன் தொழில் துறை அளவுகோல்களை விட மிகச் சிறப்பாக செயல்படுகிறது.

உலகளாவிய தொழில் நடைமுறைக்கு ஏற்ப, நிறுவனத்தின் உண்மையான நிதி ஆரோக்கியத்தையும், திறனையும் பிரதிபலிக்கவும் பங்குதாரர்களுக்கு வெளிப்படையான மற்றும் சமமான மதிப்பீட்டை உறுதிசெய்யவும் 'மதிப்பீட்டு பெறுமதி' (Appraisal Value) முறையின் அடிப்படையில் பங்குகளை மீண்டும் கொள்வனவு செய்யும் முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவானது வலுவான நிறுவன செயல்திறன் மற்றும் குறைந்த வட்டி விகித சூழலைப் பயன்படுத்துவதற்கான மூலோபாய வாய்ப்பையும், அரசாங்கப் பத்திரங்களை மாற்றுவதில் முக்கியமான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கிறது.

# மக்கள் வங்கி கல்கிரியாகம கிளை புதிய வளாகத்திற்கு இடம்மாற்றம்




மக்கள் வங்கியின் கல்கிரியாகம கிளை அண்மையில் புதிய முகவரிக்கு இடம்மாறியுள்ளது.

தாராளமான இடவசதி கொண்ட இப்புதிய கிளை, அதிநவீன டிஜிட்டல் வங்கிச்சேவை தொழில்நுட்பத்தின் பக்கபலத்துடன், முழுமையான சேவைகளை வழங்கி, வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சௌகரியத்தையும் அளிக்கின்றது.

மக்கள் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், அனுராதபுரம் பிராந்திய முகாமையாளர் அசித தனவலவிதான, உதவிப் பிராந்திய முகாமையாளர்களான ஐ.எஸ். கிரிந்தேகெதர, சுதீர ஜெயசிங்க, எஸ்.பி.கே. எக்கநாயக்க, சிரேஷ்ட சட்ட அலுவலர் எஸ்.எம்.டி குமாரி, கிளை முகாமையாளர் நெவில் திசாநாயக்க, வாடிக்கையாளர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

1961 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி, 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் என்ற அதிகூடிய வாடிக்கையாளர் தளத்துடன், இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கிகளுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. 749 கிளைகளுடன் நாட்டில் மிகப் பெரிய வலையமைப்பினை அது கொண்டுள்ளது.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விருதை பெற்ற SLT–MOBITEL




இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2024 இல், பயன்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவில் இரண்டாமிடத்தை SLTMOBITEL சுவீகரித்திருந்தது.

அண்மையில் கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் டிஜிட்டல் முன்னேற்றத்தில் SLTMOBITEL வகிக்கும் முக்கிய பங்கை உணர்த்துவதாக பயன்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவில் பெற்றுக் கொண்ட விருது மேலும் உணர்த்தியுள்ளது.

தேசத்தின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை விரிவாக்கம் செய்வதில் நிறுவனம் முக்கிய பங்காற்றுவதுடன், நாட்டின் முன்னேற்றத்துக்கு ஆதரவளிப்பதுடன், நகர மற்றும் கிராமிய மட்டங்களைச் சேர்ந்த சமூகத்தாரை இணைப்பதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் டிஜிட்டல் சேவைகள் போன்றவற்றில் புத்தாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு SLTMOBITEL ஆதரவளிப்பதுடன், மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளினூடாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றது. மேலும், தேசிய அபிவிருத்திக்கான அதன் முழுமையான வழிமுறை போன்றவற்றுக்கான, நிலைபேறான மற்றும் பொறுப்பு வாய்ந்த வியாபார செயற்பாடுகளுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பு உறுதி செய்துள்ளதுடன், இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைக்கும் பிரதான செயற்பாட்டாளராகவும் அமைந்துள்ளது. இந்த போட்டிகரமான சூழலில் SLTMOBITEL இன் சாதனை என்பதும், அணியின் கடின உழைப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபை

பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2024.08.03 சனி மற்றும் 2024.08.07 புதன் தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

SUPPLYING & INSTALLATION OF 02 NOS SUBMERSIBLE PUMPS AND IMPROVEMENTS OF INTAKE WELL OF WASTE WATER TREATMENT PLANT AT HORANA EXPORT PROCESSING ZONE

CONTRACT NO.: BOI/TS/HEPZ/2024/05/08.03.033

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக் காரர்களுக்கு, 2024.08.03 சனி மற்றும் 2024.08.07 புதன் தினங்களில் (Daily News) பத்திரிகையின் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# 4A's விளம்பரப்படுத்தல் விருதுகளில் பல வெற்றிகளைத் தனதாக்கிய AIA



சமீபத்தில் நடைபெற்ற 4A's நிறுவனத்தின் விளம்பரப்படுத்தல் விருதுகள் நிகழ்வில் AIA இன்சூரன்ஸ் தனது ஆக்கபூர்வமான மற்றும் கவர்ச்சிகரமான பிரச்சாரத் திட்டங்களுக்காக குறிப்பிடத்தக்க ஐந்து விருதுகளை வெற்றி பெற்றுப் பிரகாசித்திருந்தது.

AIA இன் 'சுவ வலங்' இதன்போது இரண்டு தங்க விருதுகள் உட்பட மூன்று விருதுகளை வெற்றி பெற்று ஒரு சிறந்த பிரச்சாரத் திட்டமாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. AIA ஸ்ரீலங்கா இலங்கைப் புற்றுநோய்ச் சங்கம் மற்றும் ஆக்கபூர்வமான விளம்பர நிறுவனமான லூப்ஸ் இன்டகிரேட் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்த இப்பிரச்சாரத் திட்டமானது மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு, அது தொடர்பாக கல்வி வழங்கல் மற்றும் சுய பரிசோதனையின் முக்கியத்துவம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான மக்களின் உள்ளார்ந்த அறிவாற்றலைத் தட்டியெழுப்பிய ஒரு தனித்துவமான பிரச்சாரத் திட்டமாகவே அமைந்திருந்தது.

இப்பிரச்சாரத் திட்டமானது இலங்கைப் பெண்கள் களிமண் பானையில் (வலங்) ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு தங்களது உடலில் ஏற்படும் அசாதாரணமான மாற்றங்களை அடையாளம் காணக்கூடியவாறு கலாசார நடவடிக்கையினைப் பயன்படுத்துவதன் மூலமாக இது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கல்வியினை வழங்குவதற்கு உடலியல் மற்றும் டிஜிட்டல் ரீதியான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்திருந்ததுடன், கலாசார ரீதியில் உணர்திறன் மிக்க முறையில் சுய பரிசோதனையின் முக்கியத்துவத்தினையும் மிகவும் வினைத்திறனாக வெளிப்படுத்தியுமிருந்தது.

# JCI அங்கீகாரத்துடன் தனது ஸ்தானத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள டேர்டன்ஸ்



டேர்டன்ஸ் வைத்தியசாலை, 3ஆவது தடவையாகவும் Joint Commission International, USA (JCI) மீள்அங்கீகாரத்தைப் பெற்று சுகாதாரத் துறையில் முன்னிலையாளர் என்ற தனது ஸ்தானத்தை மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ளது. நோயாளர் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் மகத்துவத்தின் மீது டேர்டன்ஸ் வைத்தியசாலையின் ஓயாத அர்ப்பணிப்பின் அடையாளமாக மாறியுள்ள இச்சாதனையானது, மருத்துவ நோக்கத்திற்கான சுற்றுலாத்துறைக்கு உகந்த நாடாக இலங்கையை பிரபலப்படுத்துவதற்கு வழிவகுக்கும். இலங்கையில் சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டு வருகின்ற நிலையில், டேர்டன்ஸ் வைத்தியசாலை போன்ற ஸ்தாபனங்களின் வழிநடத்தலுடன் வலுவான, கட்டுபடியான மற்றும் நம்பகமான சுகாதாரப் பராமரிப்புத் துறை காரணமாக இந்நாடு மருத்துவ நோக்கத்திற்கான சுற்றுலாத்துறையில் வளர்ச்சி கண்டு வருகின்றது. நோயாளர் கவனிப்பு, பாதுகாப்பு நெறிமுறைகள், வைத்தியசாலை செயல்பாடுகள் மற்றும் நிர்வாக ஆட்சி போன்ற அம்சங்களை உள்ளடக்கி, வைத்தியசாலையின் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்புபட்ட 1,200 க்கும் மேற்பட்ட கூறுகளை மதிப்பீடு செய்வதில் வல்லுனர்களைக் கொண்ட அணியால் விரிவான மதிப்பீடு செய்யப்பட்டே JCI மீள்அங்கீகார செயல்பாடு இடம்பெறுகின்றது.

களனி பல்கலைக்கழகம்

விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

முதலில் உற்பத்தி செய்யப்பட்ட அம்புலன்ஸை வழங்கல், ஒப்படைத்தல், பரீட்சித்தல் மற்றும் செயற்பட வைத்தல்

IFB No.: UK/GA/GA08/CNCLD/Ambulance

1. பின்வரும் அம்சத்தின் கொள்வனவிற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல்களை களனி பல்கலைக்கழக கொள்வனவுக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| அம்ச இல. | விளக்கம் | எண்ணிக்கை | IFB இல. | கேள்விப்பிணை (மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது ரொக்கப்பண வைப்பு) |
|---|---|---|---|---|
| 1. | முதலில் உற்பத்தி செய்யப்பட்ட அம்புலன்ஸை வழங்கல், ஒப்படைத்தல், பரீட்சித்தல் மற்றும் செயற்பட வைத்தல் | 01 | UK/GA/GA08/ CNCLD/ Ambulance | 260,000 இ.ரூபா. |

2. மேலே பட்டியலிடப்பட்ட அம்சத்தின் எண்ணிக்கைக்கமைவாக கேள்விதாரர் கேள்விக்கோரலை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைமூலம் நடத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை களனி பல்கலைக்கழக பொது நிருவாக பிரிவிலிருந்து பெற்று கீழேயுள்ள முகவரியில் 2024.08.07 ஆம் திகதியிலிருந்து 2024.08.28 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லையில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   (i) விலைமனுதாரர் உற்பத்தியாளரின் உள்ளூர் முகவராகவிருத்தல் வேண்டும்.
   (ii) நிதிசார் இயலுமை:
      அ) கடந்த 3 (மூன்று) வருடங்களில், 2029/2020, 2020/2021. 2021/2022 மோட்டார் வாகனங்களை வழங்குவதிலிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்த வருடாந்த நிதிப்புரள்வானது 50.00 மில். இ. ரூபாவாகவிருத்தல்.
   (iii) வர்த்தகரீதியிலான அனுபவம் மற்றும் தொழில்நுட்ப கொள்ளளவு.
      அ) விலைமனுதாரர் இலங்கையின் சட்டபூர்வமாக பதிவு பெற்ற வியாபார அமைப்பொன்றாகவிருப்பதுடன் 2018.01.01 ஆம் திகதியிலிருந்து கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு மோட்டார் வாகனங்களை வழங்கும் செயற்பாட்டில் இருந்திருத்தல் வேண்டும்.
      ஆ) விலைமனுதாரர் கடந்த ஐந்து (5) வருட காலப்பகுதியில், 2018.01.01 ஆம் திகதியிலிருந்து, அம்புலன்ஸ்களை வழங்கும் இயைவுள்ள ஒப்பந்தங்களை வெற்றிகரமாக வழங்குவதில் கடந்த கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. இலங்கைப் பணத்தில் (10,000 ரூ) 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய சான்றுடன் விலைமனுக்களை திறக்கும் வரையில் தொடர்பு கொள்ளக்கூடிய நபரொருவரின் விபரங்களுடன் அல்லது ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை கீழேயுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றுடன் அனுப்புவதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது பல்கலைக்கழக சிறாப்பரிடம் ரொக்கப் பண வைப்பில் செலுத்தப்படலாம் அல்லது மக்கள் வங்கியின் களனிக் கிளையின் 055100110667549 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வைப்பிலிடலாம்.
7. ஆவணங்கள் 2024.08.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கொள்வனவு செய்யப்படலாம்.
8. விலைமனுக்கள் 2024.08.29 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதன் பின்னர் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.
9. விலைமனுக்கோரல் தரவுத்தாளில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டவாறு விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியை பாவித்து அதன் பிரகாரம் அனைத்து விலைமனுக்களும் கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2024.11.28 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்களுக்கு பல்கலைக்கழகமானது பொறுப்பேற்கமாட்டாது.
12. மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**கொள்வனவுக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
**தபாற்குறியீடு: 11600**
**தொலைபேசி: 0112903117, தொலைநகல்: 0112914476.**
**மின்னஞ்சல்: generaladmin@kln.ac.lk**

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளை நீடித்தல்

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

தலைமன்னார் புதிய இறங்குதுறையின் நிர்மாணம் - 1 ஆம் கட்டம்
(ஒப்பந்த இல.: SLPA/PD/TAL/PIER/01)

2024-06-27ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இந்த விளம்பரத்தின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் விலைமனுக்களைத் திறக்கும் நாள் என்பவை பின்வரும் வகையில் திருத்தப்படுகின்றது.

| விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் முன்னைய இறுதி நாள் | விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் புதிய இறுதி நாள் |
|---|---|
| 2024 ஆகஸ்ட் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2024 ஆகஸ்ட் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. தலைமன்னார் புதிய இறங்குதுறை - 1ஆம் கட்டம் (ஒப்பந்த இல.: SLPA/PD/TAL/PIER/01) நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகோரல்களை துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் சார்பில் துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான பிரதான வேலையானது - Construction of a Concrete Deck Pier (Ocean beach pier) at Talaimannar having approximate length of 310m and width of 7m on precast concrete piles at water depth of 3m – ஆகியவற்றை அடக்குகின்றது.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கானவை:
   கேள்விதாரர் CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என்று அறியப்படும்) C1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைப் பெற்ற ஒப்பந்தக்காரராக இருத்தல் வேண்டும்.
   eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து கேள்விதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
   கேள்விதாரர் பின்வரும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   கடந்த 10 வருடங்களில் 600 மில்லியன் ரூபாவிற்கு குறையாத தொகையில் ஆகக்குறைந்தது ஒரு சிவில் நிர்மாண செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. 2024.06.27ஆம் திகதியிலிருந்து 2024.08.16ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் உட்பட) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 100,000.00 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விகோரல் ஆவணங்கள் வழங்கப்படும். கேள்விகோரல் ஆவணங்கள் அதே அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விக்கோரல் ஆவணங்கள் கேள்விகள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 175 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் பாதுகாப்பாக முத்திரைக்குறியிடப்பட்ட தபாலுறையொன்றில் உள்ளிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ''தலைமன்னார் புதிய இறங்குதுறையின் நிர்மாணம் - கட்டம் 1 (ஒப்பந்த இலக்கம்: SLPA/PD/TAL/PIER/01)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விக் கோரல் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
7. சகல கேள்வி ஆவணங்களுடனும் 15,000,000.00 ரூபா பெறுமதியான கேள்விப்பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது 2025.02.27ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. கேள்விக்கோரல்கள் 2024.08.20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விக் கோரல்கள் 2024.08.20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படுவதுடன் அதன் பின் அவைகள் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
9. ஏதேனும் மேலதிக விபரங்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2325575).

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய, கொழும்பு-01.**

# PCAF உடன் இணைந்த கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது அவர்களின் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தை அளவிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உதவும் உலகளாவிய முயற்சியான காபன் கணக்கியல் நிதியியலுக்கான பங்குடைமை அமைப்புடன் [Partnership for Carbon Accounting Financials (PCAF)] கையெழுத்திட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக மாறியுள்ளது.

ஏற்கனவே அதன் செயல்பாடுகளின் அடிப்படையில் 100% காபன் நடுநிலை சான்றளிக்கப்பட்டுள்ளது, PCAF உடனான கொமர்ஷல் வங்கியின் சிறந்த ஈடுபாடானது சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனத்தால் (IFC) ஆதரிக்கப்படுவதுடன் மற்றும் இது வங்கியின் காலநிலை மாற்றத் திட்டத்தின் முக்கிய அங்கமாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

PCAF ஆனது நிதியியல் துறைகளின் காபன் தடயத்தை அளவிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பொதுவான வழிமுறையை வழங்குகிறது. இந்த முறையானது உலகளாவிய GHG கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தரநிலையால் குறிப்பிடப்பட்டுள்ள நிதிசார்ந்த உமிழ்வுகள், எளிதாக்கப்பட்ட உமிழ்வுகள் மற்றும் காப்புறுதி தொடர்புடைய உமிழ்வுகள் ஆகியவை சார்பாக பல்வேறு நிதி நிறுவனங்களில் நிலையான அறிக்கையிடலை செயல்படுத்துகிறது.

'கொமர்ஷல் வங்கியில், உலகளாவிய சிறந்த நடைமுறைகள் எங்கள் செயல்களுக்கு ஊக்கமளிக்கின்றன, குறிப்பாக எங்கள் நிலைபேண்தகைமையுடன் இணைக்கப்பட்ட முயற்சிகளுக்கு உந்துதலாக உள்ளன' என்று வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க தெரிவித்தார்.

# நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா ஏற்பாடுகள் மும்முரம்

**யாழ் .விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**





வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவ கொடியேற்றத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மிகவும் மும்முரமாக அக்கோயில் நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 9ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி காலை தேர் திருவிழா நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இருபத்தைந்து தினங்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி மாலை மஞ்ச திருவிழாவும் 25ஆம் திகதி அருணகிரிநாதர் திருவிழாவும் 26ஆம் திகதி மாலை கார்த்திகை திருவிழாவும் 27ஆம் திகதி காலை சூர்யோற்சவ திருவிழாவும் 28ஆம் திகதி காலை சந்தானகோபலர் திருவிழாவும் அன்றையதினம் மாலை கைலாசவாகன திருவிழாவும் நடைபெறவுள்ளன. 29ஆம் திகதி காலை கஜவல்லி, மஹாவல்லி திருவிழாவும் அன்றையதினம் மாலை வேல் விமானம் (தங்கரதம்) பவனியும் 30ஆம் திகதி காலை தண்டாயுதபாணி திருவிழாவும் அன்றையதினம் மாலை ஒருமுக திருவிழாவும் 31ஆம் திகதி மாலை சப்பர திருவிழாவும் நடைபெறவுள்ளன.

முதலாம் திகதி தேர் திருவிழாவை தொடர்ந்து செப்டெம்பர் 2ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் அன்றையதினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. செப்டெம்பர் 3ஆம் திகதி மாலை பூங்காவன திருவிழாவும் மறுநாள் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளதாக, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## வடக்கின் உதயம்



ஐக்கிய மக்கள் சக்தியின் வட மாகாண பிரதான அமைப்பாளராக உமாசந்திரா பிரகாஷ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவால் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் பிரகாரம் வட மாகாணத்துக்கான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் கட்டமைப்பு பணி மற்றும் கடமையை நிறைவேற்றுவதற்கான தலைமை மற்றும் பொறுப்புகள் உமாசந்திரா பிரகாஷுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரத வார கொண்டாட்டம்;

# யாழ். இந்திய துணை தூதரகத்தால் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைப்பு

பாரத வார கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நூல் வெளியீட்டு விழாவை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்தியது. இதன்போது இந்தியாவுக்கிடையில் ஆழமாக வேரூன்றியுள்ள கல்வி, கலாசார உறவுகளை எடுத்துக்காட்டும் வகையில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சிக்கு இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் பேராசிரியர் சிவலிங்கராஜா எழுதியதும், எஸ். பத்மநாத (சோபா) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுமான நூல் வெளியிடப்பட்டது. இந்தியா, இலங்கை கல்வி மற்றும் மதப் பாலத்தின் 200 ஆண்டுகள் என்ற மற்றைய நூலும் இதன்போது வெளியிடப்பட்டது.

இந்நூல்களின் முதல் பிரதிகளை வடமாகாண சபைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ். இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ சாய் முரளி, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார, பொருளாதார, பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான அம்சங்களை உள்ளடக்கிய பன்முக உறவுகள் தொடர்பாக தெரிவித்தார். நெருக்கடியான காலத்தில் இலங்கைக்கு இந்தியாவின்





உறுதியான ஆதரவை வலியுறுத்திய அவர், இந்நூல்களுக்கான வெளியீடனானது இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று கலாசார தொடர்புகளுக்கு சான்றாகுமென்றார். மேலும் இந்நூல்களை வெற்றிகரமாக வெளியிட பங்களிப்பு நல்கிய பேராசிரியர் சிவலிங்கராஜா, எஸ்.பத்மநாத உள்ளிட்ட அனைவரையும் யாழ். இந்திய துணைத் தூதுவர் பாராட்டினார்.

பாரத வார கொண்டாட்டத்தின் மற்றுமொரு பகுதியாக இரண்டு திரைப்படங்கள் திரையிடப்படுவதாகவும், அவையாவன பொன்னியின் செல்வன் மற்றும் மலையாள திரைப்படமான மாளிகைப்புறம் ஆகியவையே திரையிடப்படுகின்றன.

# இளம் ஆசிரியர் சடலமாக மீட்பு

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியாவின் நெளுக்குளம், பாலாமைக்கல் பிரதேசத்தில் இளம் ஆசிரியர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வீதியால் சென்றவர்கள் வழங்கிய தகவலுக்கமைய மேற்படி பிரதேசத்தில் தோட்டக் காணியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து இந்த ஆசிரியரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக, நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, வேப்பங்குளம் 60 ஏக்கர் பிரதேசத்தில் வசித்து வந்த, வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை பிரிவில் கற்பிக்கும் ஆசிரியரான கிருஷன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகிலிருந்து இவரது சைக்கிள், பாதணி, குடை ஆகியவற்றையும் தாம் மீட்டுள்ளதாகவும், பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## நீர்கொழும்பு பிரதேச செயலகப்பிரிவு

### கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை விற்பனை 2025

மேற்குறித்த குத்தகை விற்பனைக்கான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் குறிப்பிட்ட நேரம் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| விபரம் | திகதி | நேரம் |
|---|---|---|
| கள்ளுத் தவறணை குத்தகை | 2024.09.26 | மு.ப 10.30 |
| வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை | 2024.09.26 | மு.ப 10.30 |

09.08.2024 திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2397 இன் பகுதி I: பிரிவு (IIஆ) - விரிவாக வெளியிடப்பட்டுள்ளது மற்றும் www.documents.gov.lk வலைத்தளத்தைப் பார்வையிட்டு தகவல்களைப் பெறலாம்.

**ரசிகா மல்லவஆரச்சி**
**பிரதேச செயலாளர்**
**நீர்கொழும்பு.**

**2024 ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி**
**நீர்கொழும்பு பிரதேச செயலகம்**



## அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு

**ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத் தோட்டம் / விவசாய வர்த்தகத்திற்காக (எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டவை உட்பட) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை அரச தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு விடுவதற்கான**

### விலைமனு அறிவித்தல்

1. பின்வரும் காணித்துண்டுகளுக்கான ஏற்றுமதி சார்ந்த நிலையான வர்த்தகத் தோட்டம்/ விவசாய வர்த்தகத்திற்காக "தகுதியுடைய முதலீட்டாளர்கள்" இடமிருந்து முதலீட்டு முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| தோட்டம் | இடம் | காணி அளவு |
|---|---|---|
| I கந்தலோயா | பெலேபிட்டிய, கேகாலை | 439 ஏக்கர்கள் |
| II நெலவுல்ல | நெலவுல்ல, குருநாகல் | 300 ஏக்கர்கள் |
| III தெல்தோட்டை, போபிட்டிய மற்றும் கிரேட் வெல்லி தோட்டம் | தெல்தோட்டை மற்றும் போபிட்டிய, கண்டி | 312 ஏக்கர்கள் |

2. "தகுதியான முதலீட்டாளர்கள்" என்பது இலங்கை பிரஜைகளால் 50% இற்கு மேற்பட்ட பங்குகளை கொண்டுள்ளதுடன் இலங்கையில் முறையாக கூட்டிணைக்கப்பட்ட புகழ்பெற்ற நிறுவனங்களை குறிக்கும். விவசாயம் சார்ந்த ஏற்றுமதிகள் உட்பட வர்த்தக பெருந்தோட்ட விவசாயம், கால்நடை, விவசாய வர்த்தகத் துறையில் ஏதாவது ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டதில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவத்துடனான அவ்வாறான கூட்டு நிறுவனங்கள் தகுதி பெற்றவையாகும். அவ்வாறு தற்போதுள்ள கூட்டு நிறுவனங்கள் இலங்கை பிரஜைகளினால் 50% பங்குகளை பேணும் அதேநேரம் கூட்டு முயற்சிகள் (JV), சிறப்புத் தேவை கருவி (SPVs), கூட்டுச்சங்கம் முதலியவற்றின் வடிவமாக இருக்கலாம். எவ்வாறாயினும், தொழில்நுட்ப மற்றும் நிதி உள்ளீடுகள், வெளிநாட்டு கூட்டாண்மையாளர்களிடம் இருந்து பெற முடியும். பிரிவு 3.1.3 இன் கீழ் தகுதிக்கான அளவுகோல்கள் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்தைப் பார்க்கவும்.
3. தேர்வு செய்யப்பட்ட முதலீட்டாளர் அரச தலைமை மதிப்பீட்டாளரினால் (GCV) தீர்மானிக்கப்படும் குத்தகை வாடகையை செலுத்த வேண்டும். ஐந்து ஆண்டு அபிவிருத்திக் காலம் சலுகைக் காலமாக கருதப்படுவதோடு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட 6ஆவது ஆண்டில் இருந்து வாடகைக் கொடுப்பனவு அமுலுக்கு வரும். GDP deflator அடிப்படையில் வருடாந்தம் குத்தகை வாடகை மாற்றத்திற்கு உட்படுத்தப்படும்.
4. மீளளிக்கப்படாத கட்டணம்/ செயன்முறை கட்டணமாக இருபதாயிரம் இலங்கை ரூபாவை (இ.ரூபா 20,000/-) செலுத்தி 2024 ஓகஸ்ட் 08 ஆம் திகதி தொடக்கம் 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை பத்தரமுல்லை, கட்டம் II, "செத்சிறிபாய", 8ஆவது மாடி (ஏ பிரிவு), அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு, நிதிப் பிரிவில் இருந்து ஆர்வமுடைய தரப்பினரால் விலைமனு ஆவணத்தை வாங்கலாம்.
5. விலைமனு ஆவணங்களை பத்தரமுல்லை, கட்டம் II, "செத்சிறிபாய", 8ஆவது மாடி (ஏ பிரிவு), அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு, நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களை வழங்கும் காலத்தில் அலுவலக நேரத்திற்குள் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும் அல்லது காணித் துண்டு தொடர்பில் மேலதிக விபரங்கள் மற்றும் குறிப்புக்காக https://www.msper.lk என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.
6. முதலீட்டு முன்மொழிவினை "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிட்டு இரு வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இட்டு 2024 ஓகஸ்ட் 29 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு, அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு, 03ஆவது மாடி (சி பிரிவு), "செத்சிறிபாய", கட்டம் II, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது பத்தரமுல்லை, கட்டம் II, "செத்சிறிபாய", 8ஆவது மாடி (ஏ பிரிவு), அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு, நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். முன்மொழிவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத் தோட்டம்/ விவசாய வர்த்தகத்திற்காக (எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டவை உட்பட) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை அரச தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு விடுதல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களை additionalsecretarymsper@gmail.com என்ற மின்னஞ்சல், 0112078301 என்ற தொலைநகல், 0112795369 என்ற தொலைபேசி இலக்கத்தில் பத்தரமுல்லை, கட்டம் II, செத்சிறிபாய, 3ஆவது மாடி, அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு, மேலதிகச் செயலாளரிடம் இருந்து பெற முடியும்.
8. கிடைக்கப்பெறும் முதலீட்டு முன்மொழிவு 2024 ஓகஸ்ட் 29 ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு மூடப்படும் என்பதோடு மூடப்படும் நேரம் முடிவுற்ற பின் பத்தரமுல்லை, கட்டம் II, "செத்சிறிபாய", 08ஆவது மாடி, அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சில் உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
9. இந்த விலைமனு அறிவித்தல் மற்றும் காணித்துண்டுகள் தொடர்பில் மேலதிக விபரங்களை https://www.msper.lk என்ற அமைச்சு இணையதளத்தின் Procurement பகுதியில் பார்க்க முடியும்.

**தலைவர்,**
**அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு**
**அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு,**
**3ஆவது மாடி, "செத்சிறிபாய", கட்டம் II, பத்தரமுல்லை.**



**Repeat Your Ad For Better Offers**



## பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு, பொது வைத்தியசாலை, கேகாலை

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளரால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வகைகளை வழங்கிப் பொருத்துதல் மற்றும் கட்டிட பழுதுபார்த்தல், நிர்மாணங்களுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.08.27 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் அன்றே மு.ப. 10.30 இற்கு திறக்கப்படும்.

| தொ. இல. | I வேலை விபரம் | II பொறியியல் மதிப்பீட்டுத் தொகை | III குறைந்த பட்ச பதிவு | IV கேள்விப் பிணை முறிப் பெறுமதி ரூ. | V கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. | IV ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மருந்துக் களஞ்சியம் மற்றும் சிறுநீரக சிகிச்சை அலகிற்கான மின்சாரத்தை வழங்குதல் மற்றும் மருந்துக் களஞ்சியத்தின் மின் அமைப்பை தயாரித்தல் | ரூ. 05 மில்லியன் | CIDA EM4 | 50,000.00 | 2000.00 | 30 நாட்கள் |
| 02 | சத்திரசிகிச்சை கூடத்தின் வளிச்சீராக்கி அமைப்பைப் பழுதுபார்த்தல் | ரூ. 04 மில்லியன் | CIDA EM4 | 40,000.00 | 1700.00 | 30 நாட்கள் |
| 03 | பிரதான கட்டிடத்தின் பின்பக்க உள்நுழைவுக் கதவை மறுசீரமைத்தல் மற்றும் சிகிச்சையகம் வரை வர்ணம் பூசுதல் | ரூ. 08 மில்லியன் | CIDA C7 | 80,000.00 | 2900.00 | 60 நாட்கள் |
| 04 | வார்ட் கட்டிடத்தொகுதியின் தரைமாடி மற்றும் முதலாம் மாடியின் கொரிடோவை மறுசீரமைத்தல் | ரூ. 1.7 மில்லியன் | CIDA C9 | 17,000.00 | 1000.00 | 30 நாட்கள் |
| 05 | அவசர சிகிச்சை அலகு கட்டிடத்தை மறுசீரமைத்தல் | ரூ. 3.3 மில்லியன் | CIDA C8 | 33,000.00 | 1500.00 | 60 நாட்கள் |
| 06 | வார்ட் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் மூன்றாம் மாடிகளின் கொரிடோவை மறுசீரமைத்தல் | ரூ. 3.2 மில்லியன் | CIDA C8 | 32,000.00 | 1400.00 | 30 நாட்கள் |
| 07 | வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தின் சிகிச்சையகப் பிரிவை மறுசீரமைத்தல் | ரூ. 3.3 மில்லியன் | CIDA C8 | 33,000.00 | 1400.00 | 30 நாட்கள் |

02. மேற்படி வேலை விடயங்களுக்காக நிர்மாண அபிவிருத்தி நிறுவனத்தின் (CIDA) தகைமையுடைய மேற்படி அட்டவணையின் (IIம் நிரலில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கு பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வி சமர்ப்பிப்பதற்கு தகைமையானவர்கள் ஆவர் எனினும் இப் பெறுகைக்காக போதுமான போட்டி நிலை இல்லாதவிடத்து அதற்குக் கீழ் உள்ள தகைமையான நிறுவனங்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

03. 2024.08.05 முதல் 2024.08.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் அட்டவணை (V) இல் குறிப்பிடப்படும் பெறுமதியைச் செலுத்தி கேகாலை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் அரச அங்கீகாரம் பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட பிணை முறியுடன் 2024.08.27 மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கேகாலை பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது பணிப்பாளர், பொது வைத்தியசாலை, கேகாலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். உங்களால் கேள்விகள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் .............. (அட்டவணை 01 இல் உள்ளவாறு வேலை விபரம்) என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. மேற்படி வேலை விடயங்கள் சம்பந்தமாக கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கலந்துரையாடல் 2024.08.20 மு.ப. 10.30 இற்கு பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

06. 05 மில்லியனுக்கு மேற்பட்ட வேலை விடயங்களுக்கு பொது ஒப்பந்த பதிவாளர் நிறுவனத்தின் (PCA 3) சான்றிதழுடன் சமர்ப்பியுங்கள்.

07. இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கேகாலை பொது வைத்தியசாலையின் நிறுவனப்பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பே.இல.: 0352222261 (330 நீடிப்பு)

08. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவுடன் கவனியுங்கள்.

**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை, கேகாலை**

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024-08-07

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை (e-GP) முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011 -2635886/071-1525234 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.** | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
